
ராணி
முத்து
லட்சுமிபிரபா
எங்கே
என்
ஜீவனே...
ரூ.6



# சிறுநீரகக் கல்லா?

தினமும் கேரட், கொள்ளுத் துவையல், பார்லி தண்ணீர், இளநீர், அன்னாசி, வாழைப்பழம், பாகற்காய் போன்றவைகளை சேர்த்து வந்தால் சிறுநீரகத்தில் கல் உருவாகும் வாய்ப்பு தடுக்கப்படும்.

– இரா.பாலகிருஷ்ணன், வரக்கால்பட்டு.

## ஆட்டோ வாசகம்

'முடியும் என்பது மூலதனம், முடியாது என்பது மூடத்தனம்'– மதுரையில் ஒரு ஆட்டோவில் ரசித்த வாசகம், இது.

– அக்ஷயா முருகானந்தம், சுப்பிரமணியபுரம்.





1

நேத்ராவுக்கு இரவெல்லாம் தூக்கம் பிடிக்கவில்லை.

கவலை அவளது மனதை, கரையானாய் அரித்தது.

புரண்டு புரண்டு படுத்தபடி, சிந்தித்துக்கொண்டே இருந்தாள்.

'நாளைக்கு நரேந்திரன் வெளிநாட்டில் இருந்து வந்துவிடுவாரே?



# எங்கே என் ஜீவனே...



லட்சுமி பிரபா

அவர் வரப்போகும் சந்தோஷம்கூட மனதில் ஒட்ட மறுக்கிறதே? இதற்கு யார் காரணம்?'

அப்பா தசரதன்!

சென்னையை அடுத்த குன்றத்தூர் அரசு பொது மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணியாற்றி வருகிறார். ஏனோ, தெரியவில்லை நேற்று இரவு அவர் வீடு திரும்பவில்லை.

சுற்று வட்டாரத்தில் 'கைராசியான டாக்டர்' என்று பெயர் எடுத்தவர். தனது வீட்டின் முன்பகுதியைத் தடுத்து, சிறு 'கிளினிக்' ஒன்றும் நடத்தி வந்தார்.

நேத்ராவை கண்ணுக்குக் கண்ணாக- பாசமாக பார்த்துக்கொள்வார். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், அவளுடைய தாயார் தவமணி மறைந்துவிட்டார்.

அந்தத் துக்கம் தெரியாத வண்ணம் பாசமழை பொழிந்து, 'தாயுமானவராய்' திகழ்பவர். பக்தி மிகுந்தவர். சதா நேரமும் அவரது நெற்றியில் விபூதி பளிச்சிடும்.

ஓய்வு கிடைக்கும் நேரத்தில் தியானம், யோகாசனம் போன்றவற்றில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வார். திருமூலர் எழுதிய திருமந்திரத்தை அவ்வப்போது எடுத்து வாசித்துக்கொண்டே இருப்பார்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள சுருளி மலைக்கும், மருந்து மலைக்கும் சென்று வருவதை வழக்கமாக வைத்திருந்தார்.

சுருளி அருவியில் குளித்துவிட்டு, சுருளி ஆண்டவரை தரிசித்த கையோடு, மருந்து மலையில் உள்ள பஞ்ச லிங்கத்தை கண் குளிர வழிபட்டால் மட்டுமே அவருக்கு அலாதி திருப்தி, நிம்மதி.

அந்த மூன்று நாட்களுக்கு மகளைத் தனியே விட்டுச் செல்வதற்கு முன்... அவரது மனம் படாத பாடுபடும்.

"அம்மாடி! பக்கத்து வீட்டு பாட்டிம்மாகிட்டே சொல்லிட்டுப் போறேன். வயசுப் பொண்ணை இப்படி தனியே விட்டுட்டுப் போறது தப்புதான். ஆனா, மூணு மாசத்துக்கொரு தடவை அங்கே போயிட்டு வந்தாத்தான் மனசுக்கு தெம்பா இருக்கு. ஏதோ 'ரீசார்ஜ்' ஏத்திக்கிட்ட மாதிரி புத்துணர்ச்சியாக தெரியுது" என்று தயங்கி நிறுத்துவார்.



"அடுத்தவங்களுக்கு நம்மால முடிஞ்ச மட்டும் உதவி செய்யணும். தொந்தரவு பண்ணக் கூடாதுன்னு நீங்கதானேப்பா சொல்வீங்க? பாட்டிக்கு எதுக்குப்பா சிரமம்? எனக்கு ஒரு பயமும் இல்லே. இது, நீங்க பார்த்துப் பார்த்து கட்டின அழகான வீடு. பாதுகாப்பானது. பின்னால உள்ள அறையில தோட்டக்காரர் தங்கி இருக்காரு. ஒரு குரல் கொடுத்தால் ஓடிவரப் போறாரு.

எல்லாத்துக்கும் மேல ஜிம்மி. ஒரு சின்ன சிட்டுக்குருவிகூட நம்ம 'கேட்' மேல உட்கார முடியாது. இந்தத் தெருவே அதிரும்படியா குலைச்சிடும்னு உங்களுக்கே தெரியுமே? எனக்கு தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் ஊட்டி வளர்த்திருக்கீங்க.

நான் இப்போ சின்னப் பொண்ணு இல்லேப்பா. எம்.பி.பி.எஸ். முடிச்ச டாக்டர்! தனியார் ஆஸ்பத்திரியில வேலைக்குச் சேர்ந்திருக்கேன். என்னைப் பத்தின கவலையை விட்டுட்டு, நிம்மதியாக போயிட்டு வாங்கப்பா..." என்று சென்ற முறை அப்பாவுக்கு தைரியம் கூறி அனுப்பி வைத்திருந்தாள்.

கடந்த தடவை அவர் திரும்பி வந்தபோது... "அம்மாடி நேத்ரா... இந்தவாட்டி திரும்பி வர்றதுக்கே எனக்குத் மனசில்லைம்மா. நிறைய சுவாரசியமான விஷயங்களைப் பத்தி கேள்விப்பட்டேன். நேரடியாக ஒரு அற்புதத்தை கண்ணால பார்த்துட்டேன். என்ன ஒரு அற்புதம்?" என்றார்.

"ஊருக்குத் திரும்பி வர்றதுக்கே மனசில்லைன்னு சொல்றீங்களேப்பா? நிச்சயமாக ரொம்ப அற்புதமான விஷயம் உங்க மனசைத் தொட்டிருக்கு... அது என்னன்னு நான் தெரிஞ்சிக்கலாமா?" ஆர்வமாய் கேட்டாள்.

"கண்டிப்பா. நீ இதை அவசியம் தெரிஞ்சிக்கணும்டா. சுருளிமலை ஒரு புண்ணிய பூமின்னு உனக்கு சொல்லி இருக்கேன் இல்லையா?"

"ஆமாப்பா. சித்தர்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும் தவம் செய்த இடம். கைலாச குகை, விபூதி குகைன்னு சித்தர்கள் தவம் செய்த குகைகள் நிறைய இருக்குன்னும் சொல்லி இருக்கீங்க. இன்றைக்கும் நிறைய சந்நியாசிகள் அங்கே தவம் செய்துட்டு வர்றதா வேற சொன்னீங்களேப்பா?"

"அதுமட்டுமில்ல. அற்புதமான மூலிகைச் செடிங்க அங்கே நிறையவே இருக்கு. வேற எங்கேயும் கிடைக்காத அரிய வகை மூலிகைகள் சுருளி மலையிலும், அதை ஒட்டின மருந்து மலையிலும் இருக்காம் நேத்ரா. நோய் தீர்க்கக்கூடிய மூலிகைகள் நிறைஞ்சி இருக்கிறதாலதான் 'மருந்து' மலைன்னு பேர் உண்டாச்சாம்.

உன்னை நரேந்திரன் கையில ஒப்படைச்சிட்டு... உங்க ரெண்டு பேரையும் மாலையும், கழுத்துமா பார்த்துட்டா... அப்புறம் நான் நிம்மதியாக மருந்து மலையிலேயே பஞ்ச லிங்கத்தை சதா தரிசனம் பண்ணிக்கிட்டு, அங்கேயே மடத்துல தங்கிடலாம்னு இருக்கேன். இப்பக்கூட கடமைக்காக– அதாவது உன்னைக் கரையேத்தணுங்கிற கடமைக்காகத்தான் திரும்ப வந்திருக்கேன்."

"அப்பா... என்னப்பா இப்படிச் சொல்றீங்க? அடிக்கடி நீங்க அங்க போவீங்க. மூணு நாள் கழிச்சு திரும்ப வரும்போது, புத்துணர்ச்சியோடு திருப்தியா வந்து இறங்குவீங்களேப்பா... இந்த முறை என்னாச்சு உங்களுக்கு?

இன்னமும் நீங்க பணி ஓய்வு பெறலை. உன்னதமான மருத்துவர் தொழிலையும், உயிரா நினைக்கிற பொண்ணையும் விட்டுட்டு... அங்கேயே தங்கிடணும்னு முடிவு பண்ணுற அளவுக்கு அங்கே என்னப்பா நடந்துச்சு?"

"மருந்து மலையில பஞ்ச லிங்கத்தை தரிசனம் பண்ணுறதுக்காக போறப்போ... அடிக்கடி சிவகுருங்கிற வைத்தியரைப் பார்த்திருக்கேன். பரஸ்பரம் அறிமுகமாகி எங்களுக்குள்ளே ஒரு நட்பே உருவாயிடுச்சுன்னு வச்சிக்கோயேன்..."

"அந்த வைத்தியர் உங்களை மாதிரி பஞ்சலிங்க தரிசனத்துக்காக அவ்வப்போது வந்து போவாராப்பா?"

"இல்லை... இல்லை. அவர் அங்கேயே தங்கி இருக்காரு." பஞ்சலிங்கங்கிறது திறந்த வெளிக் கோவில்தான். மலை உச்சியில இருக்கு. இவரு மலை அடிவாரத்துல ஒரு கூடாரம் போட்டு தங்கி, மூலிகை வைத்தியம் பண்ணிட்டு இருக்காரும்மா. தீராத நோய்களை எல்லாம் தீர்த்து வச்சிட்டு இருக்காருன்னு பல பேர் சொன்னாங்க. அவரைத் தேடி நிறைய ஜனங்க நம்பிக்கையோடு வந்துட்டு போறாங்க.



போன தடவை நான் அவரோட குடிலுக்கு போனப்போ... ஒரு குஷ்டரோகியைப் பார்த்தேன். மூலிகை இலைகளை விழுதா அரைச்சு அவனோட உடம்பெல்லாம் பூசி இருந்தாங்க. அவன் சோர்வாக திண்ணையில படுத்துக் கிடந்தான்.

'இப்படி மோசமா உள்ளவனை மூலிகை வைத்தியத்தால குணப்படுத்த முடியுமா?'ன்னு சந்தேகமா கேட்டேன். 'மூலிகைகளாலே குணப்படுத்த முடியாத வியாதி– இந்த உலகத்துல இல்லைன்னு சொல்லலாம். நீங்க அடுத்த தடவை வரும்போது அவனைப் பாருங்க. அப்படியே அசந்து போவீங்க'ன்னு சிரிச்சபடி சொன்னாரு சிவகுரு.

இந்தத் தடவை அங்கே போனப்போ, சுவாமி தரிசனம் முடிச்சிட்டு அவரோட குடிலுக்குப் போனேன். தியானத்துல இருந்தாரு. உதவியாள் ஒருத்தன் வட்ட வடிவக் கல்லுல ஏதோ மூலிகைகளை அரைச்சிக்கிட்டிருந்தான். காட்டு மலர்களை மூங்கில் கூடையில பறிச்சிட்டு வந்த ஒரு இளைஞன், வாழை நார்ல வேக வேகமா மாலையாக தொடுத்தான். அவனை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கேன்னு நான் யோசிச்சிக்கிட்டு இருந்தேன். கொஞ்ச நேரத்துல குடிலுக்குள்ள இருந்து ஒரு குரல் வந்தது.

"என்ன தசரதா! இவன் யாருன்னு அடையாளம் தெரியுதா... இல்லையா? குஷ்டரோகியா இருந்தவன்தான்... மூலிகையோட மகிமையாலே முழு மனுஷனா ஆகிட்டான் பார்த்தீங்களா?'ன்னு சிவகுரு சிரிச்சிக்கிட்டே சொன்னாரு.

நான் ஆச்சரியத்துல ஆடிப் போயிட்டேன். பச்சிலை மருந்தை அரைச்சிக்கிட்டிருந்த உதவியாள், 'கால் சூம்பிப்போய், பிறவி ஊனமா பிறந்த என்னை– சிவகுரு சாமிதான் குணப்படுத்தினாரு. அதுக்கு அப்புறம் ஊருக்குத் திரும்பிப் போக மனசில்லாம சேவகம் செய்யற பாக்கியத்தைப் கொடுங்கன்னு கேட்டுட்டு... இங்கேயே தங்கிட்டேன்'னு சொன்னான்."

"அ... அப்பா! கேட்கும்போதே மெய்சிலிர்க்குதே! நேரடியாகவே பார்த்த உங்களுக்கு எப்படி இருந்திருக்கும்னு என்னால புரிஞ்சுக்க முடியுதுப்பா. என்னதான் இருந்தாலும் நீங்க நிரந்தரமாக என்னை விட்டுட்டுப் போயிடாதீங்கப்பா. என்னால தாங்க முடியாது.

அப்படிப் போறதா இருந்தா என்னையும் கூடவே கூட்டிட்டுப் போயிடுங்க."

அவரது கரத்தைப் பற்றிக்கொண்டு தழுதழுத்தாள்.

"நேத்ரா! அழக்கூடாது. உன் கண்ணுல இருந்து ஒரு சொட்டு கண்ணீர் வந்தாக்கூட என்னால தாங்க முடியாதும்மா. இப்போதைக்கு இதைப் பத்தி நாம பேச வேணாம். சரியா?" என்று அப்பா தசரதன் அன்று பேசிய வார்த்தைகள்– திரும்பத் திரும்ப அவளது செவிகளில் எதிரொலித்துக்கொண்டே இருந்தன.

## 2

திகிலும், பயமும் போட்டி போட்டுக்கொண்டு நேத்ராவை ஆட்டிப்படைத்தன.

'முந்தா நாள் நடந்த சம்பவத்தைப் பார்த்தால், அப்பா ஏதோ ஒரு சிக்கலில் மாட்டிக்கொண்டார் போல இருக்கிறதே?

அன்று அப்பாவுடன் வேலை பார்க்கும் சக டாக்டர் வாசுதேவன், வீடு தேடி வந்தாரே?'

அதிகாலை நேரத்தில்கூட நேத்ராவுக்கு வியர்த்து வழிந்தது. அவளது நினைவலைகள் பின்னோக்கி சுழன்றன.

அன்று காலையில், அடுப்பில் கொதித்துக்கொண்டிருந்த மணத்தக்காளி வத்தக் குழம்பில் பெருங்காயப் பொடியைத் தூவி கரண்டியால் நன்கு கிளறிவிட்டு, பாத்திரத்தை இறக்கி வைத்தபோது– தலையில் முண்டாசு கட்டியபடி தோட்டத்தில் இருந்து பிஞ்சு கத்தரிக்காய்களை தன் கைகளாலேயே பறித்துக்கொண்டு மலர்ந்த முகத்துடன் அடுக்களைக்குள் நுழைந்தார் அப்பா.

"வத்தக்குழம்பு வாசனை கும்முனு இருக்கு. உங்க அம்மா மாதிரியே உனக்கும் நல்ல கைப்பக்குவம்டா. சோத்துக்கு தொட்டுக்க என்ன வச்சிருக்கே?"

"கொத்தவரங்காய் பருப்பு உசிலிப்பா..."

"அப்புறம்...?"





"போங்கப்பா! காரசாரமான சாப்பாட்டை அப்படியே ஒரு பிடி பிடிக்கிறவரு மாதிரியில்ல பேசுறீங்க? சமீபகாலமாக உப்பு, உறைப்பு எதுவுமில்லாம வெறும் தயிர் சாதத்தை ரெண்டு கவளம் சாப்பிட்டு எந்திரிச்சிடுறீங்க. வர வர முற்றும் துறந்த முனிவர் மாதிரி ஆகிட்டீங்கப்பா."

"ஊகூம்! அப்படியெல்லாம் சொல்லாதேம்மா. நான் முற்றும் துறந்திருந்தா, வீட்டுக்குத் திரும்ப வந்திருக்கவே மாட்டேனே! மலையிலேயே தங்கி இருப்பேனே? சரி... விடு! உனக்கு கத்தரிக்காய் வதக்கல்னா ரொம்பவும் பிடிக்குமே...செய்துடறேன்."

"எதுக்குப்பா உங்களுக்கு சிரமம்? வேலை இல்லைன்னா உடனே நளபாகம் பண்ணுறேன்னு அடுக்களைக்குள்ளே நுழைஞ்சிடுறீங்க. அதுவுமில்லாம நீங்களே தோட்டத்துக்கு போய் காய்கறி பறிக்கணுமா? தோட்டக்காரருக்கு குரல் கொடுத்தா, அவர் பறிச்சிட்டு வந்துடமாட்டாரா?" ஆதங்கப்பட்டாள்.

"என் கையால சமைச்சதை நீ ருசிச்சு சாப்பிடும்போது, மனசுக்கு எவ்ளோ திருப்தியா இருக்கு தெரியுமா? என்னோட மனசு உனக்கு எங்கே புரியப் போகுது? 'என் விவகாரத்துக்குள்ளே அநாவசியமா நுழையாதீங்கப்பா'ன்னு நீதான் நிபந்தனை போட்டுடுறியே? தோட்டத்துச் செடியிலே இருந்து நம்ம கையாலேயே காய்களைப் பறிச்சிட்டு வர்றதிலே ஒரு அலாதி சுகம் இருக்கு. அது தெரியுமா உனக்கு?"

"இப்படி சொன்னா எப்படிப்பா? எல்லாத்துக்கும் ஒரு காரணத்தைச் சொல்லி, என் வாயை அடைச்சிடுறீங்க."

செல்லமாய் சிணுங்கியபடி அப்பாவை ஏறிட்டாள்.

"உள்ளதைத்தானே சொல்றேன். நீ மட்டும் என்னவாம்...? அதிகாலையில எந்திரிச்சி, பூஜைக்கு ஏத்த பூக்களை உன் கையாலேயே பறிச்சி மாலையா தொடுத்து சாமி படங்களுக்கு போடுறியே? 'வேலைக்கு போற பொண்ணு நீ! ஏம்மா மெனக்கெடறே?'ன்னு நான் கேட்டா... 'மனசுக்கு நிம்மதியாகவும், நாள் முழுக்க புத்துணர்ச்சியாகவும் இருக்கு'ன்னு பதில் சொல்றேல்ல? அதுமாதிரிதான் இதுவும்..."

அப்பா இதமாய் முறுவலித்தார்.



நேத்ரா ஏதோ பேச வாயெடுக்கும் முன் வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

சட்டென்று ஓடி ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

"அப்பா... உங்ககூட வேலை செய்யற வாசுதேவன் சார் வர்றாருப்பா."

"வாசுதேவனா? என்னத்துக்கு திடுதிப்புன்னு வீடு தேடி வந்திருக்கான்னு தெரியலையே?"

யோசனையுடன் புருவங்கள் நெரிய, முன்னறைக்கு விரைந்தார் தசரதன்.

பழச்சாறு நிறைந்த குவளைகளை, தட்டில் வைத்து எடுத்துக்கொண்டு வந்து அவரிடம் நீட்டியபடி, "வாங்க... நல்லா இருக்கீங்களா அங்கிள்?" என்று வரவேற்பு வார்த்தைகளை உதிர்த்துவிட்டு, மீண்டும் அடுக்களைக்குள் அடைக்கலமானாள்.

அப்பாவுக்கு நெருங்கிய நண்பர்கள் யாரும் கிடையாது. தான் உண்டு, தன் வேலை உண்டு என்று ஒரு வட்டத்துக்குள் வாழும் வழக்கம் உள்ளவர்.

என்றைக்காவது அரிதாக யாராவது அவரைத் தேடி வந்தால், மரியாதை நிமித்தம் வரவேற்றுவிட்டு நாசூக்காக தன் அறைக்குள் புகுந்துகொள்வாள் நேத்ரா.

அந்த நபர் விடைபெற்றுச் சென்ற பின், அப்பாவிடம் இருந்து அழைப்பு வந்தால்தான் அறையைவிட்டு வெளியே வருவாள்.

அன்றும் அப்படித்தான். ஈரத்துணியால் அடுப்பு மேடையை மெல்லத் துடைத்துக்கொண்டு இருந்தவள், காரசாரமான விவாதத்தால் அதீத சப்தம் வரவே, அடுக்களை வாசல் அருகே வந்து நின்று செவிமடுத்தாள்.

"என்ன தசரதன் நீ? இப்படி புரிஞ்சிக்காம பேசுறியே? மருந்துமலை, சுருளிமலையைப் பத்தி பேசினாலே பாவங்கிற மாதிரி பயந்து சாகுறியே? நேத்து ராத்திரி டி.வி. நிகழ்ச்சியைப் பார்த்திருந்தா இப்படி பேசி இருக்கமாட்டே"

வாசுதேவன் குரலில் எரிச்சலும், ஏமாற்றமும் ததும்பி வழிந்தன.

"மருந்துமலைக்கும், டி.வி. பார்ப்பதற்கும் என்ன சம்பந்தம்? அதுல செய்திகளை மட்டும்தான் நான் பார்க்கிறது வழக்கம்."

"அதனாலதான் உனக்கு விஷயமே தெரியலை. மருந்து மலையில நடக்கிற அதிசயங்களைப் பத்தி நேத்திக்கு டி.வி.யில காட்டினாங்க தெரியுமா?

தீராத நோய்களைத் தீர்க்கிற மூலிகைகள் நிறைஞ்சி இருக்கிற அதிசய மலையாமே அது?

சிவகுருங்கிற வைத்தியரைப் பற்றியும் நிறையவே சொன்னாங்க. ஆனா, டி.வி.யில தலைகாட்ட விருப்பம் இல்லைன்னு அவர் சொல்லி... கூடாரத்தைவிட்டு வெளியே வர மறுத்துட்டாராம்.

இன்னொரு அற்புதமான விஷயத்தைப் பற்றியும் சொன்னாங்க. கேட்கவே ரொம்ப புல்லரிப்பா இருந்துச்சு. நீ அடிக்கடி அந்த மலைக்குப் போய் வர்றவனாச்சே... இதைப் பத்தி ஏன் என்கிட்டே மூச்சே விடலை?"

"அங்கே நிறைய அதிசயங்கள் நிகழ்ந்துட்டு இருக்கு. அதுல நீ எந்த அதிசயத்தைப் பத்தி இப்போ கேட்கறே?"

கம்மிய குரலில் கேள்விக் கணையைத் தொடுத்தார்.

"யாரோ ஒரு தம்பதியாம்... பல வருஷங்களாகவே கணவன்-மனைவியுமா பக்கத்து பக்கத்து குகைகள்லே தவம் இருக்காங்களாமே? ஒரு பெரியவரு பேட்டி கொடுத்தாரு. அவருக்கு வயது எண்பதுன்னு சொல்றாங்க. அதைக் கேட்டதும் எனக்கு ரொம்பவே அதிர்ச்சி ஆகிடுச்சு."

"அந்தப் பெரியவரு அப்படி என்னதான் சொன்னாரு?"

தழைந்த குரலில் கேட்டார்.

"ஒவ்வொரு பவுர்ணமி அன்னிக்கும் கங்கை அம்மன்னு ஒரு வயதான பெண், தன் கணவோராடு நடுஜாமத்துல அங்கு வந்து பஞ்சலிங்கத்தை தரிசனம் பண்ணுவாங்களாம். அப்போ சிவகுரு வைத்தியர்கிட்ட ரெண்டொரு வார்த்தை பேசுவாங்களாம். அவங்களைப் பார்க்க நிறைய பக்தர்கள் வர்றாங்களாம்.

அதிர்ஷ்டம் உள்ளவங்களுக்கு மட்டும் நெருங்கிய தரிசனம் கிடைக்குமாம். விபூதி பூசிவிட்டு, உச்சந்தலையில கையை வச்சு ஆசிர்வதிப்பாங்களாம்.





# முதல் கதை

திருவாரூரில் 17 வயது மாணவரான கருணாநிதி எழுதிய முதல் கதை 'இளமைப் பலி' கிழவரை மணந்து விதவையான இளம் மங்கைக்கு மறுமணம் செய்து வைக்க வலியுறுத்தும் கருத்து கொண்டது. அண்ணா நடத்திய 'திராவிட நாடு' இதழில் 26.4.1942 அன்று வெளியானது.

– தங்க.சங்கரபாண்டியன், சென்னை.

# இந்திய தபால்

★ வெளிநாடுகளுக்கான தபால் தலைகள்- கடிதங்கள் இந்தியாவில் முதலில் வெளியிடப்பட்டது 1861 ஜனவரி 4.

★ பணவிடை (மணி ஆர்டர்) 1880 ஜனவரி முதல் அறிமுகமானது.

★ பலூன்கள் மூலம் தபால்களைக் கொண்டு செல்லும் முறை 1941 ஜனவரி 14-ல் ஆரம்பமானது.

★ உலகின் முதல் 'ஏர் மெயில்' தபால் சேவை அலகாபாத்-நைனிடால் இடையே 1911 பிப்ரவரி 18-ல் தொடங்கியது. 6,500 கடிதங்கள் விமானத்தில் நைனிடாலுக்கு கொண்டு செல்லப்பட்டன.

★ முக்கியமான பத்திரங்கள், நாணயங்கள் முதலியவற்றை பாதுகாப்பாக தபாலில் அனுப்பும் முறை 1795 பிப்ரவரி 20-ந்தேதி தொடங்கியது.

★ இந்தியத் தபால் இலாகாவில் சேமிப்புக் கணக்கு அறிமுகமானது 1882 ஏப்ரல் 1.

– சரஸ்வதி குமார், சந்தையூர்.

# இதயம் பேசுகிறது

## சுவாரசியமான படைப்பு

வி.உஷா எழுதிய 'பூக்கள் பூக்கும்நேரம்' நாவலில், ஒடுக்கப்பட்டோர் அடையும் துன்பத்தையும், அதைப் போக்க சாரு-நகுலன் எடுக்கும் நடவடிக்கைகளையும் இதமாக இழையோட விட்டுவிட்டார்.

**-அ.ராஜப்பன், கருமத்தம்பட்டி.**




பல துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும், இந்தக் கதை ஒரு சாட்டையடி.

**-கிருஷ்ணாபுரம் கிருஷ்ணன்.**

வித்தியாசமான காதல் கதை, மிகவும் விறுவிறுப்பாக சென்றது. 'புரட்சிப் பூக்கள்' என்று பெயர் வைத்திருந்தால்கூட பொருத்தமாகத்தான் இருந்திருக்கும்.

**- அயன்புரம் த.சத்தியநாராயணன்.**

உழைக்கும் மக்களின் உரிமைக்குரலாய் உள்ளம் தொட்டது.

**- சுபா, ராமேஸ்வரம்.**

இலக்கிய மேற்கோள்களும், இனிய வரிகளும், இதயம் கவரும் கதையும் மனதைக் கொள்ளை கொண்டு நறுமணம் பரப்பின.

**- உமா, சென்னை.**

நாவல் முழுக்க மலர்ச்சியான சம்பவங்களும், திருப்பங்களும் 'சூப்பர்'.

**- கே.சேதுராமன், ஸ்ரீரங்கம்.**

சாரு போன்ற அழகான பூவுக்குள், பூகம்பத்தைப் புதைத்து வைத்திருந்தது சுவாரசியம்.

**- ராஜா, தைலாம்பாளையம்.**

கவிக்குயில் பகுதி, கவித்துவத்தால் நிறைந்திருந்தது.

**-ராஜிராதா, பெங்களூர்.**

உங்கள் கருத்துகளை அனுப்ப வேண்டிய முகவரி:
**இதயம் பேசுகிறது,**
**'ராணி முத்து',**
**சென்னை- 600 007.**



தீராத நோயெல்லாம் சீக்கிரமே தீர்ந்திடுமாம். அவங்க தரிசனத்துக்காக நிறைய ஜனங்க தூரத்துல முண்டியடிச்சி காத்துக் கிடக்கிறாங்களாம்.

அந்தம்மா மனசு வச்சு... கூட்டத்துல இருக்கிறவங்களைப் பார்த்து ஏதாச்சும் பேர் சொல்லிக் கூப்பிடுறாங்களாம். அந்தப் பேர் உள்ள நபருக்குத்தான் இந்த அரிய வாய்ப்பாம்.

அதுக்கு அப்புறம் கொஞ்ச நேரம்கூட நின்னு நிதானிக்காம அவங்க ரெண்டு பேரும், மலையின் மறுபக்கமா கிடுகிடுன்னு இறங்கிடுறாங்களாம். இருட்டுல அந்தச் சரிவுலே இறங்கறது லேசுப்பட்ட விஷயம் இல்லையாம்.

அந்தம்மா தன்னோட குகைக்குள்ளே போனா... திரும்பவும் அடுத்த பவுர்ணமிக்குத்தான் வெளியே வர்றாங்களாம்.

தசரதா... அந்தப் பெரியவரு டி.வி.யில பேசப் பேச நான் வியப்போட விளிம்புக்கே போயிட்டேன். மூலிகையோட மகிமையாலதான் அந்தத் தம்பதி இளமையா இருக்காங்க. மரணத்தை ஒத்திப் போடக்கூடிய மூலிகையை அவங்க சாப்பிட்டு இருப்பாங்கன்னு எனக்குத் தோணுது. இதைப் பத்தி ஏன் என்கிட்ட சொல்லலை? நீ அடிக்கடி அங்கு போறவனாச்சே! உனக்கு நிச்சயமா இதைப் பத்தி தெரிஞ்சிருக்கும்தானே?"

"தெரியும்... ஆனா, சொல்லணும்னு எனக்கு தோணவே இல்லை. அதான் உண்மை. என் பொண்ணுகிட்டயே நான் இதைச் சொல்லலை தெரியுமா? ஒருசில விஷயங்களை மட்டுமே அவகிட்ட சொல்லி இருக்கேன். தெய்வச் செயலாலே நடக்கிற அதிசயங்களை வெளியில சொல்றதுக்கு எனக்கு மனசு வரலை. போதுமா?"

"அதுசரி! நான் விஷயத்துக்கு வர்றேன். நீ மனசு வச்சா, மருத்துவத்துறையில மிகப்பெரிய அளவுலே நாம சாதிக்க முடியும். இந்த உலகமே நம்மை திரும்பிப் பார்த்து அதிசயிக்கிற அளவுக்கு உயரலாம்"

"புரியலை வாசுதேவா! சுத்தி வளைக்காம நேரடியா விஷயத்துக்கு வாயேன்..." தசரதனின் குரலில் எரிச்சல் மண்டிக் கிடந்தது.

"நீ அடிக்கடி மருந்து மலைக்குப் போறதால, வைத்தியர் சிவகுருகிட்ட நெருங்கிப் பழகிட்டு வர்றேன்னு ஏற்கெனவே

சொல்லி இருக்கே. அவருக்கு எல்லா மூலிகைகளும் அத்துப்படி இல்லையா? இளமையைக் கட்டிக் காக்கிறதுக்கும், மரணத்தைத் தள்ளிப் போடுறதுக்கும் உரிய மூலிகைகளைப் பத்தி அவரிடம் இருந்து தெரிஞ்சுக்கணும்."

"தெரிஞ்சு என்ன பண்ணப்போறே? டி.வி.யில பார்த்தேயில்ல? அவரு விளம்பரத்தை விரும்பாதவரு. தன்னோட முகம் டி.வி.யில வரக்கூடாதுன்னு, தங்கி இருந்த கூடாரத்தைவிட்டு வெளியே வரவே இல்லைன்னு சொன்னேயில்ல? நீயும், நானும் போய் கேட்டா... மூலிகைகளைப் பத்தி விலாவாரியா சொல்லிடுவாரா? உனக்கே இது முட்டாள்தனமாக படலையா?"

"இல்ல தசரதா... எனக்கு நம்பிக்கை இருக்கு. நீ மனசு வச்சா இது நடக்கும். உனக்காக அந்த சிவகுரு எதையும் செய்வாருன்னு என் மனசுக்குப் படுது."

"இல்ல... எனக்கு இதுல சுத்தமா உடன்பாடு இல்ல. என்னால அவருகிட்ட எதையும் கேட்க முடியாது. கேட்கவும் மாட்டேன்."

தசரதனின் குரலில் உறுதியும், பிடிவாதமும் தொனித்தன.

"ஒரு நிமிஷம்... நான் சொல்றதைக் கேளேன். லாஸ்ஏஞ்சல்ஸ்லே இருக்கிற என் நண்பன் டாக்டர் டேவிட்கிட்டே இதைப் பத்தி சொன்னேன். அந்த குறிப்பிட்ட மூலிகைகள் நம்ம கைக்கு கிடைச்சா, அதை வச்சு கோடானு கோடி சம்பாதிக்கலாம்னு சொன்னான்.

'இளமை குன்றாம இருக்கிறதுக்கும், மரணத்தைத் தள்ளிப் போடுறதுக்கும் மருந்து கிடைச்சா அது என்ன விலையாக இருந்தாலும் வாங்கிட்டு, பணத்தைக்கொட்டிக் கொடுக்க மக்கள் தயங்கவே மாட்டாங்க'ன்னும் சொல்றான்.

சர்வதேச அளவிலே புகழ், பணம், அந்தஸ்து கிடைக்குமே? யோசிச்சுப் பாரு. உன் மகளுக்கு இன்னமும் கல்யாணம் ஆகலை. அது மட்டும் நடந்துட்டா, அவளுக்கு கிலோ கணக்குல தங்க நகை பூட்டி அழகு பார்த்துடலாம். என்ன சொல்றே?"

"ஒண்ணா வேலை செய்யறவர்னுதான் இவ்ளோ நேரமா உட்கார்ந்து நீ கேட்கற கேள்விகளுக்கு பதில் சொல்லிட்டு இருந்தேன். தயவுசெய்து இதுக்கு மேல ஒரு வார்த்தைகூட பேசாம, எந்திரிச்சு போய்கிட்டே இரு.



மூலிகைகள் நம்ம நாட்டோட பொக்கிஷம். அதை பேரம் பேசி, வெளிநாட்டுல இருக்கிற உன் நண்பனோடு சேர்ந்து காசு பண்ணப் பார்க்கிறியே... இது அடுக்குமா?

அந்த மலையில நடக்கிற அதிசயங்கள் எல்லாம் தெய்வச்செயல்! சித்தர்களோட அருளாசியால நடக்குதுன்னு சொல்லிக்கிட்டு இருக்கேன். நீ என்னன்னா முட்டாள்தனமா பேசிக்கிட்டு இருக்கே?

கெட்ட எண்ணத்தோட மூலிகைகளைத் தேடி அங்கே போனா என்ன நடக்கும் தெரியுமா? அழிவுதான் ஏற்படும்.

'விநாச காலே விபரீத புத்தி'ன்னு பெரியவங்க சும்மாவா சொன்னாங்க? இத்தோட இந்த விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வச்சிடு வாசு"– உக்கிரமாக கத்திவிட்டார்.

"நல்ல யோசனை கொடுக்க வந்த நண்பனை அவமானப்படுத்தி அனுப்பறே. இப்படி பேசினதுக்காக ரொம்பவும் வருத்தப்படப் போறே தசரதா."

கோபத்தாலும், அவமானத்தாலும் கொந்தளித்துப் போய் உறுமிவிட்டு வெளியேறினார் வாசுதேவன்.

இந்த நிலையில்தான் நேற்றிரவு வேலைக்குப் போன தசரதன், வீடு திரும்பவில்லை.

'பணி முடிந்து எட்டரை மணிக்கு கணீரென்று வந்துவிடும் அப்பா, ஒன்பது மணி ஆகியும் இன்னமும் வரவில்லையே? அவரது செல்போனுக்கு முயற்சித்துப் பார்க்கலாமா?' என்று நேத்ரா யோசித்துக்கொண்டு இருந்த வேளையிலே, செல்லமாய் சிணுங்கியது.

எடுத்தாள். எதிர்முனையில் அப்பாதான்!

"ஹலோ நேத்ரா... முக்கியமான விஷயமா நான் வெளியூர் போறேன்மா. திரும்பறதுக்கு கொஞ்ச நாளாகும்."

"என்னப்பா திடீர்னு... அப்படி எங்கே போறீங்க?"

"நான் திரும்பி வந்து சொல்றேன்மா. நீ பார்த்து பத்திரமா இருந்துக்கோ."

மறுகணமே இணைப்பு துண்டிக்கப்பட்டது.

நேத்ரா முயற்சித்தபோது, அந்த செல்போன் அணைத்து வைக்கப்பட்டிருந்தது.

'அப்பா ஒருக்காலும் இப்படி நடந்துகொள்ள மாட்டாரே? வாசுதேவனால் அப்பாவுக்கு ஏதாச்சும் ஆபத்து நேர்ந்துவிட்டதா?

ஒருவேளை கடத்தப்பட்டுவிட்டாரா?'

விழிகளில் இருந்து வெப்ப நீரூற்று இடைவிடாமல் பொங்கியது.

## 3

நேரம் நத்தையாக நகர்ந்துகொண்டிருந்தது. குளித்து முடித்து நேராக பூஜையறைக்குச் சென்று அமர்ந்தாள் நேத்ரா.

பத்து நிமிடங்கள் விழிகளை மூடி தியானம் செய்துவிட்டு எழுந்தபோது, மனம் ஒருநிலைப்பட்டு இருந்தது.

'டிரிங்... டிரிங்... டிரிங்...'

மேசையில் இருந்த செல்போனில் மறுபடி அழைப்பு வந்ததும், நாலே எட்டில் ஓடிச்சென்று எடுத்தாள்.

திரையில் மின்னி மின்னி சிரித்த எண்களைப் பார்த்தாள்.

நரேந்திரன்!

"ஹலோ நேத்ரா... உன் மேல ஏகப்பட்ட கோபத்துல இருக்கேன். விமான நிலையத்துக்கு நீ வருவேன்னு எவ்வளவோ எதிர்பார்த்தேன் தெரியுமா... ஏன் வரலே?"

"சாரி! எ... என்னால வர முடியல..."

"வர முடியலையா? உதைப்பேன் உன்னை. ச்சே! மோசமான பொண்ணுப்பா. நானும், நீயும் மனப்பூர்வமா விரும்பற காதலர்கள். அந்த நெனைப்பு இருக்கா உனக்கு? இல்ல... அதை மறந்துட்டியா?"

"நா... எதையும் மறக்கலை"– தழுதழுத்தாள்.

"மறக்கலையா... பரவாயில்ல. என் திருப்திக்கு விலாவாரியா



ஒரு முறை ஞாபகப்படுத்திடறேனே! நாம ரெண்டு பேரும் ஒரே கல்லூரியில படிச்சோம். நீ எனக்கு ஜூனியர். படிப்புல நீயும் என்னைப் போலவே முதலா இருக்கிறதைப் பார்த்துட்டு மனசைப் பறிகொடுத்து, உன்கிட்ட வந்து– 'நான் உன்னை காதலிக்கிறேன் நேத்ரா'ன்னு சொன்னேன்.

'இந்தக் காதல் கத்தரிக்காய்லே எனக்கு நம்பிக்கை இல்ல. ஒவ்வொரு பொண்ணுக்கும் காதல்ங்கிற உணர்வு, கல்யாணத்துக்கு அப்புறமா தன்னோட கணவன்கிட்டதான் வரணும்னு நெனைக்கிறவ நான்.

உங்க நேசம் நிஜமானதுன்னா– வீட்டுப் பெரியவங்களை அழைச்சுட்டு வந்து எங்க அப்பாகிட்ட முறைப்படி பொண்ணு கேளுங்க'ன்னு கறாரா நீ சொல்லிட்டே.

படிப்பு முடிய இன்னமும் மூணு மாசந்தானே இருக்குன்னு எங்க வீட்டுலே பேசி, பெரியவங்களை அழைச்சிட்டு வந்து பொண்ணு கேட்டோம். உங்க அப்பாவும் கடைசியில சம்மதிச்சாரு. மேற்கொண்டு வெளிநாட்டுக்குப் போய் எம்.எஸ். படிக்க ஆசைப்பட்டேன். படிப்பை முடிச்சிட்டு வந்து கல்யாணம் பண்ணிக்கலாம்னு நாம தீர்மானிச்சோம்.

ரெண்டு வீட்டுலேயும் தாம்பூலம் மாத்தி, நிச்சயம் செய்துட்டாங்க. 'போன்'ல நான்தான் காதலை உரம் போட்டு வளர்த்துட்டு வந்தேன். நீ அழுத்தக்காரி! உனக்கு சுய கவுரவம் ஜாஸ்தி. ஒரு நாளாவது நீயா எனக்கு போன் பண்ணி, 'நரேன், நான் உன்னை ரொம்பவே காதலிக்கிறேன்'னு சொல்லி இருக்கியா?

இப்பகூட பாரேன். ரெண்டு வருஷம் கழிச்சு காதலன் வந்திருக்கிறானே? அவனை விமான நிலையத்துக்குப் போய் வரவேற்போம்னு நினைப்பு வருதா? சரியான கல் மனசுக்காரிப்பா!"– படபடத்தான்.

"நரேன்... பிளீஸ்... உங்க கவனம் சிதறிடுமேங்கிற பயத்துலதான்... நான் போனே பண்ணாம இருந்தேன். இன்னிக்கு விமான நிலையத்துக்கு வராதது தப்புதான். ஆனா, அதுக்கு ஒரு காரணம் இருக்கு. நேர்லே வாங்க... சொல்றேன்.

நான் வேலைக்கு போகலை. லீவு போட்டாச்சு. வீட்டுலதான் இருக்கேன். சிக்கிரம் வாங்க... நிறைய பேச வேண்டியது இருக்கு."

முட்டிக்கொண்டு வந்த அழுகையை அடக்கியபடி பேசினாள் நேத்ரா.

**போ**ரூரில்தான் நரேந்திரனின் வீடு. அப்பா, அம்மா, கல்லூரியில் படிக்கும் தம்பி என்று அளவான– அன்பான குடும்பம்.

பிள்ளைகளின் விருப்பத்திற்கு, பெற்றவர்கள் என்றுமே முட்டுக்கட்டை போட்டதே இல்லை.

"வாப்பா நரேன்! நல்லா இருக்கியா? இப்படி இளைச்சுப் போயிட்டியே? விமான நிலையத்துக்கே வந்திருப்போம். நீதான் எங்க யாரையும் வர வேணாம்னு சொல்லிட்டியே?" ஆரத்தி சுற்றியபடியே சிரித்தாள் அம்மா பத்மாவதி.

"உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்னுதான் வேணாம்னு சொன்னேன்."

"உன்னை வரவேற்கிறதுக்கு சம்பந்தியும், நேத்ராவும் வந்திருந்தாங்களா?" என்று கேட்ட அப்பா தணிகாசலத்தை ஏறிட்டான்.

"இல்லப்பா, அவங்க வரலை."

"ரெண்டு நாளா சம்பந்தியோட செல்போனுக்கு முயற்சி செஞ்சேன். அதை அணைச்சி வச்சிருக்காரு. ஏன்னு தெரியலை. நேத்ராகிட்ட நேத்து ராத்திரி பேசினேன். குரல்லே வழக்கமா தொனிக்கிற கலகலப்பே இல்ல... சோர்வா பேசின மாதிரி இருந்துச்சு."

"குளிச்சுட்டு சிற்றுண்டி சாப்பிட்டுட்டு, நேரா நேத்ரா வீட்டுக்குத்தான் போகப் போறேன். மாமாவையும், அவளையும் நேர்லே பார்த்து தெளிவா என்னன்னு கேட்டுடறேன். சரியாப்பா?"

அடுத்த அரை மணி நேரத்தில் தனது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு, குன்றத்தூரில் இருக்கும் நேத்ராவின் வீட்டை அடைந்தான்.

'பைக்' தடதடத்து நிற்கும் சப்தம் கேட்டதும், வாசலில் வந்து எட்டிப் பார்த்தாள் நேத்ரா.

"வா... வாங்க நரேன்! நல்லா இருக்கீங்களா?"



சோக முலாம் பூசிய முகத்துடன் வரவேற்றவளை, ஏற இறங்கப் பார்த்தான்.

"உன்னை எந்த நேரத்துல வந்து பார்த்தாலும் சரி... சும்மா இன்னிக்குப் பூத்த பன்னீர் ரோஜா மாதிரி சதா ஒரு மலர்ச்சியோட இருப்பாயே... இப்ப என்னாச்சு உனக்கு? உடம்பு சரியில்லையா? மாமா எங்கே? அவர்தான் 'சின்சியர்' டாக்டராச்சே? வேலை இருக்குன்னு இன்னிக்கும் கிளம்பிப் போயிட்டாரா?"

கேள்விகளை அடுக்கியபடியே வரவேற்பறை சோபாவில் வந்து அமர்ந்தான்.

கீழுதட்டை அழுந்தக் கடித்த வண்ணம், தரையில் பார்வையைப் பதித்தபடி நின்றிருந்தவளின் கரத்தை உரிமையாய் பற்றி இழுத்து தன்னருகே அமர வைத்தான்.

"கேட்டுக்கிட்டே இருக்கேன். பதிலே சொல்லாம இருந்தா என்ன அர்த்தம்? மாமா ஏன் செல்போனை அணைச்சி வச்சிருக்காரு?"

குபு குபுவென்று விழிகளில் இருந்து கண்ணீர் பொங்கி தாரை தாரையாக வடிய... தேம்பியபடி அவனது தோளில் தலை சாய்த்துக்கொண்டாள்.

"எ... என்னாச்சு நேத்ரா?"

அவனின் குரலில் பதற்றம் தொற்றியது.

மெல்ல ஆசுவாசப்படுத்திக்கொண்டு நடந்ததை எல்லாம் விவரித்தாள்.

"நீ சொல்றதை வச்சுப் பார்க்கும்போது... அந்த வாசுதேவன்தான் மாமாவைக் கடத்தி இருக்கணும்னு தோணுது. பேசாம போலீஸ்ல புகார் கொடுத்துடலாமா?"

"வே... வேணாம். போலீசுக்குப் போனா... கோபத்துல அந்தாளு, அப்பாவை ஏதாச்சும் பண்ணிடுவானோன்னு பயமா இருக்கு."

"அதையும் யோசிக்க வேண்டியது இருக்குல்ல...? சரி, அந்த அரிய வகை மூலிகைகளை உடனடியா தெரிஞ்சிக்கிட்டு கைப்பற்றணுங்கிற வெறியோடு வாசுதேவன் இருக்கிறதால, கண்டிப்பா மாமாவை அந்த மலைக்குத்தான் கடத்திட்டுப் போயிருப்பான்."

"ஐயோ நரேன்! எனக்கு ரொம்பவும் பயமா இருக்கு. அப்பா






வைராக்கியம் உள்ளவரு. வாசுதேவன் எப்படி சித்திரவதை செஞ்சாலும் சரி, அதற்கு அசைஞ்சே குடுக்க மாட்டாரு. அந்தக் கோபத்துல அப்பாவோட உயிருக்கே உலை வச்சிடுவானோன்னு கவலையா இருக்கு.அப்பாவுக்கு மட்டும் ஏதாச்சும் ஆச்சுன்னா... அதை என்னால தாங்கவே முடியாது."

உடைந்த குரலில் தேம்பியவளை ஊன்றிப் பார்த்தான்.

"மனசை திடமா வச்சுக்கோ! அப்பதான் எப்பேர்ப்பட்ட பிரச்சினை வந்தாலும் சரி... நம்மால சுலபமா தீர்வு காண முடியும். கண்ணைத் துடைச்சுக்கோ."

முதுகில் ஆதரவாய் தட்டிக்கொடுத்தான்.

"நேரத்தைக் கடத்தாம நேரா நாமளும் மேற்குத் தொடர்ச்சி மலைக்குப் போக வேண்டியதுதான்."

"என்ன சொல்றீங்க?"

"சுருளிமலை– மருந்துமலை பகுதிகளுக்குப் போய் மாமாவைத் தேடிக் கண்டுபிடிச்சிடலாம்னு சொல்றேன்."

"ந... நம்மால முடியுமா? அப்பாவைக் காப்பாத்திடலாமா?"

"முடியும்னு நம்பணும். நம்பிக்கைதானே வாழ்க்கை! சுருளி மலையும், மருந்து மலையும் சித்தர்கள் நடமாடற வனப் பகுதின்னு சொல்றே... அதனால, நம்ம மாமாவுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாதுன்னு என் உள்ளுணர்வு சொல்லுது.

மாமாவைக் காப்பாத்தணுங்கறதுதான் நம்மோட பிரதான நோக்கமா இருந்தாலும்... அந்த மலையில நடக்கிற அற்புதங்களைக் கேள்விப்பட்டதும், எனக்கு அங்கே போகணுங்கற ஆர்வம் அதிகமாகிட்டு நேத்ரா!

நீயும், மாமாவும் தூரத்து சொந்தக்காரங்களோட கல்யாணத்துக்காக தேனிப் பக்கம் வரை போயிருக்கிறதா எங்க வீட்டுல சொல்லிடறேன்.

அப்புறமா... நான் சொந்தமா ஆஸ்பத்திரி தொடங்கணும். அது சம்பந்தமா வெளியூர்ல இருக்கிற முக்கியமான நபரை நேர்லே சந்திச்சி ஆலோசனை பெற வேண்டியிருக்கு. அதனால திருச்சி வரை போக வேணும்னு வீட்டுல சொல்லிட்டு வந்துடறேன். மதுரை

வரைக்கும் நாம விமானத்துல போயிடலாம். அப்புறமா அங்கிருந்து கார் ஏற்பாடு பண்ணிக்கலாம்.

தயாரா இரு. நான் சீக்கிரமா வந்துடறேன். சரியா?"

தசரதனை ஆபத்தில் இருந்து மீட்பதற்காக பயணத்தை மேற்கொண்டார்கள் அவர்கள் இருவரும்.

ஆனால் விதி, அவர்களை ஆபத்தில் மாட்டிவிட... தக்க தருணம் பார்த்து காத்திருந்தது.

## 4

**தா**ள லயத்துடன் 'ஓ...'வென்ற இரைச்சலுடன் பாலாய் கொட்டிய சுருளி அருவியில் குளித்துவிட்டு, அருகாமையில் உள்ள உடை மாற்றும் அறையில் மாற்றுடை அணிந்துகொண்டு வெளிப்பட்டாள் நேத்ரா.

நரேந்திரன் பனிச்சென்று வெள்ளை நிற டீ-சர்ட்டும், கறுப்பு நிற பேண்ட்டும் அணிந்துகொண்டு, ஒரு மரத்தடியில் இருந்த பாறையில் வாகாய் அமர்ந்திருந்தான்.

"வர்ற வழியில... இட்லியும், வடையும் வாங்கிட்டு வந்தது நல்லதாப் போச்சு. சாப்பிட்டுட்டு நம்ம வேலையை ஆரம்பிப்போம்" என்றபடி உணவுப் பொட்டலங்களைப் பிரித்தான்.

"இல்ல நரேன். நீங்க சாப்பிடுங்க.... எனக்குப் பசிக்கலை."

"பொய் சொல்லாதே. எனக்கே அருவியில குளிச்சதும் கப கபன்னு பசிக்குது. நேத்து ராத்திரி சரியா சாப்பிடாத உனக்கு பசிக்காதா என்ன?

பாதை தெரியாததால காட்டுல நிறைய அல்லாட வேண்டியது இருக்கும். பட்டினியா கிடந்தா, போற வழியிலே மயக்கம் வந்து விழுந்துட்டா என்ன ஆகறது? அலைஞ்சு தேடறதுக்காவது உடம்புல தெம்பு வேணாமா?

நீ படிச்ச பொண்ணு. அதுவும் ஒரு டாக்டர். பிடிவாதம் பண்ணாம வந்து சாப்பிடு."



அதற்கு மேல் மறுக்கத் தோன்றாமல் அருகில் அமர்ந்து இட்லியை சாப்பிட ஆரம்பித்தாள்.

சுற்றிலும் காட்டு மரங்கள். அடர்த்தியாக, விண்ணை முட்டிப் பார்க்கும் ஆசையோடு கிடுகிடுவென்று வளர்ந்து, வனாந்தரத்திற்கே உரிய வனப்பை பறைசாற்றிக்கொண்டிருந்தன.

அருவியில் இருந்து கொட்டிய தண்ணீர் ஆறாகி, பாறைகளை முத்தமிட்டு செல்லமாய் ஜதி போட்டுக்கொண்டு ஓடிய அழகில்... ஒருகணம் மனம் லயிக்கத்தான் செய்தது.

"அப்பா மட்டும் காணாம போகாம இருந்திருந்தால், இந்நேரத்துக்கு இந்த அருவியைவிட்டு சாமானியத்துல நகர்ந்திருக்க மாட்டேன் நரேன்."

"மாமாவை கண்டிப்பா கண்டுபிடிச்சிடலாம். அவரு பத்திரமா கிடைச்சதும், நம்ம கல்யாணம்தான். தேனிலவுக்கு தேனிக்கே வந்து தங்கிடலாம்.

சுருளி மலை, மருந்து மலையை ஆசை தீரப் பார்த்துட்டு தேக்கடி, மூணாறு குமுளி பகுதிகளுக்கும் போயிட்டு வரலாம். சரியா?"

குறும்புத்தனமாய் அவளைப் பார்த்து முறுவலித்தான் நரேந்திரன்.

"அப்பா பத்திரமா கிடைச்சிடுவாருன்னு எப்படி இவ்ளோ உறுதியா சொல்றீங்க?"

அவளது தொண்டையைவிட்டு இறங்க மறுத்துப் புரட்சி செய்தது இட்லி.

"மாமாவுக்கு தெய்வ நம்பிக்கை அதிகம். அதுவும் தவிர, இது சித்தர்கள் நடமாடுற புண்ணிய பூமி. நல்லவங்களை பகவான் என்றைக்கும் கைவிடவே மாட்டாருன்னு உறுதியா நம்புறேன். பார்த்துகிட்டே இரேன்... நாம இந்த வனத்தைவிட்டுப் போகும்போது மாமாவையும் கூட்டிட்டுத்தான் போகப் போகிறோம்... சரியா?"

"உங்க வாக்கு பலிக்கட்டும்."

கன்னத்தில் வாய்க்கால் போட்டு இறங்கிய நீரை புறங்கையால் துடைத்துவிட்டு, மளமளவென்று சாப்பிட்டு முடித்தாள்.

ஈரக்கூந்தலை விரித்துப் போட்டபடி, பையை எடுத்து தோளில்

மாட்டிக்கொண்டு நரேந்திரனுடன் இணைந்து நடந்தாள்.

"தலையை நல்லா துவட்டிக்கோ. ஈரம் இன்னமும் சொட்டிட்டு இருக்கு பாரு."

கரிசனத்துடன் பேசியவனை நிமிர்ந்து பார்த்து மெல்ல முறுவலித்தாள்.

"இது வனாந்தரம். சுத்தமான காத்து எப்படிச் சுழன்றடிக்குது பாருங்களேன். தலை துவட்டத் தேவையில்லை. சீக்கிரம் காய்ந்துவிடும்."

காட்டு மரங்கள் துரிதகதியில் இலைகளை அசைத்து, காற்றோடு காதல் மொழி பேசிக்கொண்டிருந்தன.

சற்றே சரிந்து வளைந்து சென்ற பாதையில்... நரேந்திரனின் வேகத்திற்கு ஈடுகொடுத்தபடி நடந்த நேத்ரா, யோசனையுடன் அவனை ஏறிட்டாள்.

"நரேன்! நாம இப்போ எங்க போறோம்?"

"மருந்து மலைக்கு... அங்க போறதுக்கு வாகனங்கள் எதுவும் கிடையாதாம். இன்னமும் கொஞ்ச தூரத்துல அந்த மலைக்குப் போகிற பாதை வந்திடுமாம்.

அது வழியா போனா, ஒரு மணி நேரத்துல போயிடலாமாம். அருவிக்குப் போற வழியில சின்ன டீக்கடை இருக்கு பாரு... அங்கதான் விசாரிச்சு வச்சேன்."

"அந்த மலை உச்சியில இருக்கிற பஞ்சலிங்கத்தைத் தரிசனம் பண்ணிட்டு நம்ம தேடலை தொடங்கப் போறோமா?"

"ஆமா நேத்ரா. பஞ்சலிங்கத்தை தரிசனம் பண்ணிட்டு அப்படியே, அடிவாரத்துல தங்கி இருக்கிற சிவகுருவையும் பார்த்துப் பேசணும்."

"அந்த மூலிகை வைத்தியரை தன் வழிக்கு கொண்டு வரணுங்கற பேராசையாலதானே அப்பாவைக் கடத்தி இருக்கான் அந்த வாசுதேவன்?"

"ஆமா..."

"அப்பாவைக் கடத்தினவங்க, அவரை சென்னையில அடைச்சி வைக்காம— அரிய வகை மூலிகைகளை அபகரிக்கிறதுக்காக நேரா



இந்த மலைக்கு அவரைக் கொண்டு வந்திருப்பாங்கன்னு நீங்க சொன்னீங்க இல்லையா?"

"ஆமா... சொன்னேன்."

"இவ்ளோ காரியம் பண்ணினவங்க, மருந்து மலையில இருக்கிற சிவகுருவையும் கடத்தி இருக்கமாட்டாங்களா? இவ்ளோ நேரத்துக்கு அவரை சும்மாவா விட்டு வச்சிருப்பாங்க?"

"எனக்கு என்னமோ அப்படித் தோணலை!"

"அவர் ஒருத்தரைப் பிடிச்சா அவங்க நெனைச்சதை சாதிச்சடலாமே? அதனாலே அவரையும் கடத்திக்கிட்டுத்தான் மறுவேலை பார்த்திருப்பாங்க.

வேணா பாருங்க! சிவகுரு தன்னோட இடத்துல இருக்கமாட்டாருன்னு நான் நினைக்கிறேன். நாம அத்தனைத் தூரம் போயிட்டு ஏமாற்றத்தோடதான் திரும்பப் போறோம்."

"மாமா சொன்னதை வச்சிப் பார்க்கும்போது, சிவகுரு மேல எனக்கு தனி மரியாதையே உண்டாகிடுச்சு. அவரு அவ்ளோ சுலபத்துல வாசுதேவன் கூட்டத்துக்கிட்டே சிக்க மாட்டாருன்னு எனக்குள்ளே ஒரு ஊகம். சரி, நாம சரியான பாதையைப் பிடிச்சிட்டோம். இனி பாதை மாறாம சீக்கிரமா போக வேண்டியதுதான்."

சமீபத்தில் பெய்த மழையால் அந்தக் காட்டுப் பாதை குண்டும் குழியுமாய், கரடு முரடாய் இருந்தது. பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தால் பெரிய சரிவு பயமுறுத்தியது.

"மலைப்பாதை ஏத்தமா இருக்கிறதால உனக்கு நடந்து வர சிரமமா இருக்குல்ல...? மூச்சிரைக்குதே நேத்ரா! வேணும்னா கொஞ்ச நேரம் ஓய்வா உட்கார்ந்துட்டு போலாமா?"

"வே... வேணாம். சிரமத்தைப் பார்த்தா முடியுமா? அப்பாவை நாம கண்டுபிடிச்சாகணும். இந்த சிரமத்துக்கே ஓய்ஞ்சு உட்கார்ந்துட மாட்டேன்."

வைராக்கியத்துடன் மேல் மூச்சு வாங்க நடந்தவளைக் கண்டு, "குட்... பொண்ணுங்க இப்படித்தான் கருமமே கண்ணா இருக்கணும்" என்று பாராட்டுப் பத்திரம் வாசித்தான்.

"கூட நீங்க இருக்கீங்களே? கல்யாணத்துக்கு முன்னாடியே

வருங்கால மனைவியோட கஷ்ட நஷ்டத்துல பங்கு எடுத்துக்கிட்டு இருக்கீங்க. நிஜமாவே பெரிய ஆள்தான்!

மனசுக்கு எவ்ளோ தெம்பா- ஆறுதலா இருக்கு தெரியுமா? இந்தத் தைரியத்துல நான் இமயமலையைக்கூட ஏறிக் கடப்பேன் தெரியுமா...?"

"இந்த வனாந்தரத்துல ஊதல் காத்து சில்லுன்னு உடம்பைப் பதம் பார்க்குதே? இது போதாதுன்னு நீ வேற 'டன்' கணக்குல 'ஐஸ்' வைக்கிறியே நேத்ரா... என்னால தாங்க முடியலைடா செல்லம்."

அவன் பரிதாபமாக முகத்தை வைத்துக்கொண்டு பேசிய விதம் அவளுக்கு குபீரென்று சிரிப்பை வரவழைத்தது.

கலகலவென்று சிரித்தபடியே, "நான் நிஜத்தைத்தானே சொன்னேன்? எனக்கு 'ஐஸ்' வைக்கத் தெரியாதுப்பா" என்றாள்.

"விளையாட்டா நடக்காதே நேத்ரா. பார்த்து கவனமா ஏறு... என் கையைப் பிடிச்சுக்கோ" என்றபடி அவளது வலது கரத்தை ஆதரவாய் இறுகப் பற்றியபடி நடந்தான்.

அதிபயங்கரமான அந்தக் காட்டில், நள்ளிரவில்... தன்னந்தனி ஆளாய் தவிக்கப்போவதை அப்போது அவள் அறிந்திருக்கவில்லை!

## 5

மருந்து மலையில் உள்ள பஞ்சலிங்கக் கோவில், ஒரு திறந்தவெளி ஆலயமாகத்தான் இருந்தது.

நான்கு புறமும் நான்கு லிங்கங்கள். நடுவே சற்றே பிரமாண்டமாய் பெரிய லிங்கம். அதற்கு நேர் எதிரே கம்பீரமான நந்தி.

மலை உச்சியில் காற்று பலத்த இரைச்சலுடன் சுழன்றடித்தது.

"கொஞ்சம் அசந்தோம்னா... இந்தக் காத்து நம்மளை அதல பாதாளத்துல தள்ளி விட்டுட்டுத்தான் மறுவேலை பார்க்கும் போலிருக்கு"- முணுமுணுத்தபடி சுற்றும் முற்றும் பார்த்தான் நரேந்திரன்.



"மலை உச்சியில இருந்து பார்க்கும்போது, சுற்றிலும் பச்சைப் பசேல்னு... பெரிய பிரபஞ்சத்தையே பகவான் கொண்டு வந்து வச்ச மாதிரி பிரமிப்பா இருக்குல்ல?"

அவன் கேட்ட கேள்விக்கு பதில் ஏதும் சொல்லாமல், காற்றில் படபடத்த சேலை முந்தானையை இழுத்து இடுப்பில் செருகியபடி பெரிய லிங்கத்தை நெருங்கினாள் நேத்ரா.

மண்டியிட்டு அமர்ந்து கைகளைக் கூப்பி கண்ணீர் மல்க மனமுருகப் பிரார்த்தித்தாள்.

'அப்பா...நீங்க பத்திரமா எனக்கு திரும்பக் கிடைக்கணும். இந்தக் காட்டைவிட்டு நாங்க போகும்போது, உங்ககூடத்தான் போகணும். அதுக்கு நீ அருள் புரியணும் ஆண்டவனே.'

லிங்கத்தின் மீது காவி நிற துணி சுற்றப்பட்டிருந்தது.

அதிகாலையில் யாரோ பூஜை செய்துவிட்டு, வில்வ மாலையை சூட்டிவிட்டு சென்றிருப்பார்கள் போலும்!

லிங்கத்தின் உச்சியில் ஒற்றை நாலிங்கப்பூவும் வைக்கப்பட்டிருந்தது.

அத்தனை வேகமாய் சுழன்றடித்த காற்றுக்குக்கூட அந்தப்பூ அசைந்து கொடுக்காமல் இருந்த அதிசயத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தான் நரேந்திரன்.

நேத்ரா உள்ளம் உருக வேண்டியபடி, தரையில் விழுந்து கும்பிட்டு நிமிருவதற்கும், நாகலிங்கப்பூ அவளது மடி அருகே வந்து விழுவதற்கும் சரியாக இருந்தது.

மெய் சிலிர்த்துப்போன அவள், சட்டென்று திரும்பி நரேனை ஏறிட்டாள்.

அதே கணத்தில் 'டண்... டண்... டண்...' என்று மணியோசை, மலைப்பிரதேசமே அதிரும்படி ஒலிக்கவே- இருவரும் ஏக காலத்தில் திடுக்கிட்டு மேலே பார்த்தனர்.

நந்திக்கு அருகே இருபுறமும் பிரமாண்டமான கல்தூண்கள் நடப்பட்டிருக்க, அதன் மீது இரும்புச் சட்டம் பொருத்தப்பட்டு, நடுவில் பெரிய மணி மாட்டப்பட்டு இருந்தது.

அவ்வளவு பெரிய மணியில் தொங்கிய சங்கிலியை, சுமார் ஐந்தாறு

பேராவது இழுத்துப் பிடித்து அடித்தால் மட்டுமே மணியோசையை உண்டு பண்ண முடியும்!

ஆனால்... என்னே ஒரு அதிசயம்? என்னதான் பலத்த காற்று வீசினாலும், இவ்வளவு கனத்த மணி அசைவதற்குக்கூட வாய்ப்பே இல்லையே?

அப்படி இருக்க– மணி ஒலித்ததைக்கண்டு இருவருக்குமே ஜிவ்வென்று மேனி சிலிர்த்தது.

நேத்ரா சட்டென்று அந்த நாகலிங்கப் பூவை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

"ந... நரேன்! இ... இந்த அதிசயத்தைப் பார்த்திங்களா?"

பரவசத்தில் அவளுக்கு நாக்கு குழறியது.

"நேத்ரா... எல்லாமே தெய்வச்செயல்தான். மாமா காணாம போயிட்டாருன்னு அவரைத் தேடிக்கிட்டு வந்தோம். இந்த இடத்துல இப்படியொரு அதிசயத்தை பார்க்கணுங்கிறது பிராப்தம்! உண்மையிலேயே நாம ரொம்ப பாக்கியசாலிகள் இல்லையா?

இனிமே நீ எதுக்கும் கவலைப்படாதே. மாமா பத்திரமா நமக்கு கிடைச்சிடுவாருன்னு பரிபூரணமா நம்பு. இது சித்தர்கள் நடமாடற வனப் பகுதின்னு எல்லாரும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கோம். இன்னிக்கு அது கண்கூடா நிரூபணம் ஆகிடுச்சு."

"ஆமா... நரேன்! சித்தர்கள்தான் இப்படியொரு அற்புதத்தை நிகழ்த்திக் காட்டி இருக்காங்க. அரூபமா அவங்க இங்கே நடமாடிக்கிட்டு இருக்காங்க. அதனால்தான் அப்பாவுக்கு இந்த இடத்தைவிட்டு திரும்பறதுக்கு மனசே வரலை போலிருக்கு."

"நம்ம கல்யாணத்தை நடத்தி முடிச்சுட்டு வந்து, இங்கேயே தங்கிடணும்கிற முடிவுக்கு... மாமா வந்துட்டாருன்னு நீ சொன்னியே? இதே மாதிரி அற்புதங்களை அவர் கண்டிப்பா கண்கூடா பார்த்திருப்பாரு.

சரி நேத்ரா. நாம இந்த மலையைவிட்டு இறங்கலாமா? அடிவாரத்துல தங்கி இருக்கிற சிவகுருவைப் பார்க்கணும். அவரை மட்டுமல்ல... முடிஞ்சா கங்கையம்மாவையும் பார்த்துடணும்..."– பையை தோளில் மாட்டிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

"க... கங்கையம்மாவை நாம எப்படிப் பார்க்க முடியும்? அவங்க



பவுர்ணமிக்கு மட்டும்தான் வெளியே வருவாங்களாமே?"

"பவுர்ணமிக்கு இன்னம் ரெண்டு நாள்தானே இருக்கு?"

"என்ன அவ்ளோ சுலபமா சொல்லிட்டீங்க? அதுவரைக்கும் எங்க தங்கறதாம்?"

"சிவகுருவைப் பார்க்கப் போறோம்ல? அவருகிட்ட கேட்டுப் பார்க்க வேண்டியதுதான். மாமாவுக்கு சிநேகிதராச்சே... உதவி பண்ணாமலா போயிடுவாரு?"

சரிந்து கீழே சென்ற பாதையில் கவனமாக கால் பதித்து மெல்ல இறங்கியபடி, யோசனையுடன் அவனை ஏறிட்டாள்.

"வாசுதேவன் நம்ம வீட்டுக்கே வந்து, டி.வி. நிகழ்ச்சியில கங்கையம்மாவைப் பத்தி சொன்ன தகவலை அப்பாகிட்ட பிரமிச்சிப் போய் சொல்லிட்டு இருந்தாரு.

அப்பக்கூட அதை நான் நம்பலை. ஏதோவொரு கட்டுக்கதையா இருக்கும்னு நெனைச்சேன். நடக்கிறதை பார்க்கும்போது, எல்லா விஷயங்களுமே உண்மையா இருக்கும்னுதான் தோணுது."

"கண்டிப்பா. எனக்கும் அந்த நம்பிக்கை வந்ததாலதானே கங்கையம்மாவைப் பார்த்துடணும்னு சொல்றேன்."

"டி.வி.யில விஷயத்தை வெட்ட வெளிச்சம் ஆக்கிட்டாங்க. வாசுதேவன் மாதிரி எத்தனைப் பேரு கெட்ட எண்ணத்தோட இங்கே வந்திருக்காங்கன்னு தெரியலை.

இதெல்லாம் தெரிஞ்சு ஒருவேளை அந்த கங்கையம்மா இந்த முறை பவுர்ணமிக்கு குகையைவிட்டு வெளியே வராம இருந்துட்டாங்கன்னா?

பஞ்சலிங்க தரிசனத்துக்கு பவுர்ணமியில அவங்க வந்தாதானே நாம பார்க்க முடியும்?"

"பார்த்து... கவனமா இறங்கு. கையைப் பிடிச்சுக்கோ. நீ சொல்றதும் சரிதான். ஒருவேளை அவங்க வராம இருந்துட்டாலும், நாம சோர்ந்துடக்கூடாது. எப்படியாவது முயற்சி பண்ணி அவங்களைப் பார்த்துடணும்."

"என்ன சொல்றீங்க? வரலைன்னா, எப்படி பார்க்க முடியும்?"

"அவங்க இருக்கிற இடத்துக்கே போக வேண்டியதுதான்."

ஸ்தம்பித்து நின்றுவிட்டாள் அவள்.

விபரீத விளையாட்டைத் தொடங்க ஆர்வமாய் காத்திருந்தது காலம்.

## 6

அடிவயிற்றில் பயப் பந்து வேகமாய் உருண்டது.

"வேணாம் நரேன். நாம எதுக்கு பார்க்கணும்? அவங்க மருந்து மலை மறுபக்கமா சரசரன்னு இறங்கிப் போயிடுவாங்களாம்.

அவ்ளோ வேகமா அப்படி யாராலும் இறங்க முடியாதுன்னும், அவங்க இருக்கிற குகையை இதுவரைக்கும் யாரும் பார்த்ததில்லைன்னும் கேள்விப்பட்டேனே...!

எதுக்கு நாம சிரமம் எடுக்கணும்? போற இடத்துல காட்டுல ஏதாச்சும் ஆபத்து வந்துடுச்சுன்னா...?

அதுவும் தவிர... நாம அந்த கங்கையம்மாவைப் பார்க்க முயற்சி பண்ணுறதே சரியா... தப்பான்னு தெரியாம எப்படி காரியத்துல இறங்க முடியும்?

வீணா வம்பை விலை கொடுத்து வாங்கணுமா?

ஏதாச்சும் தெய்வ குத்தம் ஏற்பட்டுடுச்சுன்னா என்ன பண்ணுறது? நாம அப்பாவைத் தேடித்தானே வந்தோம்? பேசாம நம்ம வேலையை மட்டும் பார்க்கலாம் நரேன்!"

நேத்ராவின் பீதி படர்ந்த முகத்தை உற்றுப் பார்த்து முறுவலித்தான்.

"தெய்வ குத்தம் ஏற்படும்னு ஏன் பயப்படறே? வாசுதேவன் மாதிரி எந்தக் கெட்ட எண்ணமும் நமக்கு இல்லையே?

நமக்கு எந்த ஆபத்தும் ஏற்படாதுன்னு என் உள் மனசு சொல்லுது. ஏன் தெரியுமா...?

வந்ததும் வராததுமா பஞ்சலிங்க தரிசனத்தோட பெரிய அற்புதமும் நம் கண் முன்னே நிகழ்ந்திருக்கே?

வாசுதேவனோட நோக்கமே இளமை மாறாம இருக்கவும், மரணத்தை ஒத்திப் போடறதுக்கும் உரிய மூலிகைகளை அடையணுங்கறதுதானே?



அந்த ரகசியம் தெரிஞ்சவங்க இந்தக் காட்டுக்குள்ள மூணே பேர்தான். சிவகுரு, கங்கையம்மா, அப்புறமா அவங்களோட கணவர்.

வாசுதேவன் தன் சகாக்களோட இங்க எங்கேயோ பதுங்கி இருக்கணும். அவன் சும்மா விட்டு வைப்பானா?

அவங்ககிட்ட எப்படியும் கைவரிசையைக் காட்டி, தான் நெனச்சதை சாதிக்கப் பார்ப்பானே?"

"ஐயோ! அவனால இவங்க மூணு பேருக்கும் ஆபத்து ஏற்படும்னு சொல்றீங்களா...? அந்த பேராசைக்காரன் கொலை பாதகம் பண்ணுறதுக்கும் தயங்கமாட்டான் போலிருக்கே?"

"பயப்படாதே நேத்ரா. வாசுதேவன் இப்படித்தான் திட்டம் தீட்டி இருப்பான்னு சொல்ல வந்தேன். அவன் நெனைச்சதெல்லாம் அப்படியே நடந்துட்டா... அப்புறம் தெய்வம்னு எதுவும் இல்லையே?

நீ சொல்றதை வச்சுப் பார்க்கும்போது, அந்த கங்கையம்மா ஒரு தெய்வீக சக்தி கொண்ட பெண்ணாகத்தான் இருக்கணும்.

அவங்களுக்கே இந்நேரம் எல்லாம் தெரிஞ்சிருக்கும். சொல்லப்போனால் தன்னோட ஞான திருஷ்டியால வாசுதேவனோட சகாக்களையும், மாமாவையும், நம்மளையும் பத்திகூட தெரிஞ்சு வச்சிருப்பாங்க.

மனசுல எந்தவித களங்கமும் இல்லாம நேர்மையா, உன்னார்ந்த பக்தியோட அந்த கங்கையம்மாவைப் பார்க்கணும்னு நாம பிரியப்படுறோம்... இல்லையா?

அதனால, அவங்களே தானா முன்வந்து நமக்கு தரிசனம் தருவாங்கன்னு மனசுக்குப் படுது. சின்னதா ஒரு முயற்சி பண்ணலாமே? 'நாம ஒரு அடி எடுத்து வச்சா... தெய்வம் நம்மை நோக்கி பத்தடி எடுத்து வைக்கும்'னு பெரியவங்க சொல்வாங்க. தைரியமா இரு. எல்லாம் நல்லதே நடக்கும்."

அதற்குமேல் வாதாடத் தோன்றாமல், மவுனமாய் நடந்தாள் நேத்ரா.

மலை அடிவாரத்தை அடையும் வரை இருவர் இடையேயும் மவுனம் கெட்டிச்சுவராய் எழும்பி நின்றது.

அடிவாரத்தில் சிவகுருவின் ஆசிரமம் பளிச்சென்று பார்வையில் அகப்பட்டது. வாசல் அருகே இருந்த திண்ணையில்– காவி உடை அணிந்த இளைஞன் ஒருவன், வட்ட வடிவக் கல்லில்– கலவையான பச்சிலைகளைச் சேர்த்து சிரத்தையாய் அரைத்துக்கொண்டிருந்தான்.

"வணக்கங்க. நாங்க சென்னையிலே இருந்து, சிவகுரு ஐயாவைப் பார்க்க வந்திருக்கோம். ஐயா இருக்காருங்களா?"– நரேந்திரன் பணிவாய் கேட்டான்.

இருவரையும் ஏற இறங்கப் பார்த்த இளைஞன், "சமீபகாலமா நெறையபேரு ஐயாவைத் தேடி வர்றாங்க. எல்லாரையும் அவரு பார்க்கப் பிரியப்பட மாட்டாரே?

நீங்க என்ன விஷயமா அவரைப் பார்க்கணும்னு சொல்லுங்க. ஐயா விரும்பிக் கூப்பிட்டாத்தான், உங்களை நான் உள்ளே அனுப்ப முடியும்..."

"நான் டாக்டர் தசரதனோட ஒரே மகள். இவரு என்னோட வருங்கால கணவர். எங்க அப்பாவை..."

அவள் மேற்கொண்டு பேசி முடிக்கும் முன்பாக, உள்ளே இருந்து ஒரு குரல் இடைமறித்தது.

"சாமிநாதா! அவங்களை உள்ளே அனுப்பு."

"நேத்ரா! குனிஞ்சு வா... தலை இடிச்சிக்கப் போகுது" என்ற நரேந்திரனைப் பின்தொடர்ந்து–

தயக்கமாய் உள்ளே நுழைந்தாள்.

அந்த ஆசிரம அறை சற்றே விஸ்தாரமாகத்தான் இருந்தது. நடுநாயகமாக புலித்தோலில் அமர்ந்திருந்தவரின் மீது பார்வையைப் பதித்தாள்.

நெற்றியில் விபூதிப் பட்டையுடன் சிவப் பழமாக காட்சி அளித்தார் சிவகுரு. இடுப்பில் சாயம் போன காவி வேட்டி. தோளில் சிறுதுண்டு தொங்கியது.

அங்கிருந்த கல் உரலில் ஏதோ விதைகளையும், விபூதியையும்



சேர்த்து இடித்துப் பொடித்துக்கொண்டிருந்தார்.

கிட்டத்தட்ட அப்பா தசரதனின் வயதுதான் அவருக்கும் இருக்கும். அவரைப் பார்த்ததும் அப்பாவையே நேரில் பார்த்துவிட்டது போன்ற உணர்வில் கண்கலங்கிப் போனாள்.

அவள் பேச வாயைத் திறக்கும் முன், "என்னம்மா நேத்ரா! அப்பா காணாம போயிட்டாருன்னு, அவரைத் தேடிக்கிட்டு காட்டுக்கே வந்துட்டியா?" என்று சிவகுரு நிமிர்ந்து பார்க்காமலே கேள்விக் கணையைத் தொடுத்தார்.

'திக்'கென்ற அதிர்வில் ஆடிப்போனவளுக்கு, கண்களில் இருந்து பொல பொலவென்று கண்ணீர் வந்தது.

## 7

தோளில் மாட்டி வந்த கனத்த பையை, பொத்தென்று கீழே போட்டுவிட்டு ஓடிச்சென்று சிவகுருவின் எதிரே மண்டியிட்டு அமர்ந்தாள் நேத்ரா.

"ஐயா... நான் உங்களைத்தான் மலைபோல நம்பி வந்தேன். அப்பா காணாம போயிட்டாரு. அவருக்கு என்ன ஆச்சன்னே தெரியலை. உங்களைப் பார்த்தால், என் கஷ்டத்துக்கு ஒரு விடிவு கிடைக்கும்னு நம்பிதான் இங்கே வந்தோம்."

"என்னை மலை போல நம்பி, மருந்து மலைக்கு வந்திங்களா? சிவ சிவா! மருந்து மலை ஈசனை நம்பு. அவரைத் தரிசனம் செய்து, உன் குறையைச் சொல்லிட்டே இல்ல... இனி அவரு பார்த்துப்பாரு."

சாந்தம் தவழும் அவரது விழிகளை ஊன்றிப் பார்த்தாள்.

"நான் எதுவுமே சொல்லாமலேயே எங்களைப் பத்தி எல்லாத்தையும் நீங்களே தெளிவா சொல்லிட்டீங்களே. நீங்க சாதாரண மூலிகை வைத்தியர் கிடையாது. அதுக்கும் மேல... முற்றும் உணர்ந்த ஞானி, ஒரு மகான். சொல்லுங்க ஐயா. எங்க அப்பா பத்திரமா திரும்ப கிடைப்பாரா... அவரு எப்போ வருவாரு?"

சட்டென்று கையமர்த்தினார் சிவகுரு.

"முற்றும் உணர்ந்த ஞானியா? பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதேம்மா. 'நான் யாரு?'ன்னு இன்னமும் எனக்குள்ளே ஒரு தேடல் இருந்துட்டே இருக்கே! என் தேடலுக்கான விடை இன்னமும் கிடைக்கலையே? நீ கேட்கிற கேள்விகளுக்கு என்னால எப்படி விடை சொல்ல முடியும்? சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது.

காட்டுக்கே வந்துட்டே இல்லே? போகப் போக நீயே எல்லாத்தையும் புரிஞ்சுப்பே. எல்லா பதிலும் உனக்கு தன்னால கிடைக்கும்."

"சூட்சுமமா நீங்க பேசறது, எனக்குப் புரியலை. இருந்தாலும் உங்களைப் பார்த்ததும் எங்க அப்பாவை நேரில் பார்த்தது மாதிரி ஒரு நிம்மதி ஏற்பட்டிருக்கு. 'இனி பகவான் எல்லாத்தையும் பார்த்துப்பாரு'ன்னு வேற சொல்லிட்டீங்க. எனக்கு இது போதும்."

இப்போது நரேன் பேசினான்.

"ஐயா! மாமாவைத் தேடிக் கண்டுபிடிக்கணுங்கற வேகத்துல கிளம்பி வந்துட்டோம். 'அப்பாவைப் பார்க்காம இந்தக் காட்டைவிட்டு வரவேமாட்டேன்'னு நேத்ரா பிடிவாதம் பண்ணுறா...

எங்கே தங்கறதுன்னு தெரியலை. எங்களுக்கு உங்களை விட்டா வேற யாரையும் தெரியாது. நீங்கதான் பெரிய மனசு பண்ணி உதவணும். அவள் தங்கறதுக்கு மட்டும் இடம் கிடைச்சாப் போதும். நான் வெளியில மரத்தடியில்கூட படுத்து சமாளிச்சுப்பேன்."

"எப்பவுமே ராத்திரி நேரத்துல பச்சை மரத்தடியில படுக்கக்கூடாது. வெளிநாட்டுக்குப் போய் மருத்துவத்திலே பெரிய படிப்பு படிச்சிட்டு வந்தவன் நீ. உனக்கு இதுகூடத் தெரியாதா நரேந்திரா?"

'வெளிப் பார்வைக்குத்தான் இவர் ஒரு மூலிகை வைத்தியர். உண்மையில் சித்தர்தான்.'

நரேந்திரனின் மனதில் வரி வரியாய் எண்ணம் ஓடியது. சிவகுருவின் மேல் அலாதி மரியாதையே ஏற்பட்டுவிட்டது.

"இல்ல நரேந்திரா. நான் சாதாரண மூலிகை வைத்தியன்தான்."

நரேந்திரனுக்கு திக்கென்று இருந்தது.

அவனும் சட்டென்று மண்டியிட்டான்.



"ஐயா! நான் மனசுல நெனச்சதை... நீங்க தெரிஞ்சுக்கிட்டு சரியா பதில் சொல்றீங்களே? இது யாரால முடியும்? நீங்க சித்தர்தான். சந்தேகமே இல்ல."

இருவரையும் மாறி மாறிப் பார்த்த நேத்ரா, "எனக்கு அப்படியே புல்லரிக்குது. இது விநோதமான அனுபவம்" என்றாள்.

நரேன் திகைப்பாக பார்த்தான்.

"இதுக்கே புல்லரிச்சிட்டா எப்படி? இன்னமும் நிறைய சம்பவங்களை பார்க்கப் போறியே? சரி... எல்லாம் தெய்வச்செயல் நரேந்திரா! நீ இங்கே எங்க கூடவே படுத்துக்கலாம்.

நேத்ரா... இதோ வலது பக்கமா அங்கே மறைவா படுத்துக்கட்டும்."

அவர் தனது சுட்டு விரலால் காட்டிய திசையில், தனது பார்வையால் பயணித்தாள் நேத்ரா.

அந்த ஆசிரமத்தின் வலப்புறத்தில் குறுக்கே ஓலையால் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டு இருந்தது.

"ஐயா... ரொம்ப நன்றிங்க. இந்த உதவியை என்னிக்குமே மறக்க மாட்டோம்" கை கூப்பினான் நரேந்திரன்.

"சாமிநாதா... இவங்க பாவம். பசியோட இருக்காங்க. சாப்பிடுறதுக்கு ஏதாச்சும் கொண்டா."

உதவியாளருக்கு உத்தரவிட்டார் சிவகுரு.

உண்மையில் இருவருக்குமே அபார பசிதான். காட்டில் இருந்த காய்கனிகள் தேவாமிர்தமாக தித்தித்தன. வெகுதூரம் கரடு முரடான மலைப்பாதையில் ஏறி இறங்கிய களைப்பு வேறு.

ஓய்வின்றி வெகுநேரம் நடந்ததால், கால்கள் இரண்டிலும் விண் விண் என்று வலி பின்னி எடுத்தது.

வெளிச்சம் விடைபெற்றுப் போய் இருள் வேகமாய் பரவத் தொடங்கியது.

மெல்லிய வெளிச்சத்தில் சிவகுருவும், சாமிநாதனும் சிரத்தையாய் மூலிகைகளை அரைத்தும், இடித்தும் தயார் செய்துகொண்டிருந்தனர்.

நரேந்திரன் அவர்களுக்கு எதிரே சம்மணமிட்டு அமர்ந்து மடியில்

ஏதோ மருத்துவ இதழைப் புரட்டியபடி, அவ்வப்போது அவர்களை வேடிக்கை பார்த்தான்.

ஓலைத் தடுப்புக்கு அப்பால் தனக்கென்று ஒதுக்கித் தரப்பட்ட இடத்தில் தனது பையை வைத்தாள் நேத்ரா.

மூலையில் சில மண் குடுவைகளும், கலயங்களும் அடுக்கப்பட்டிருந்தன. பெரிய சட்டியில் படிகாரக் கற்கள் இருந்தன.

அதன் அருகே மான் தோல் விரிக்கப்பட்டு, மேலே நிறைய வேர்க்கட்டுகள் நேர்த்தியாய்- வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

பக்கத்தில் இருந்த சிறு சாளரத்தின் வழியே வெளியே பார்வையை ஓட்டினாள்.

பலமாய் காற்று வீசியதில் காட்டு மரங்கள் பேயாட்டம் போட்டன.

மின்மினிப் பூச்சிகள் அசுர வேகத்துடன் இங்கும் அங்குமாய் பறந்துகொண்டிருந்தன. ஒரு மரத்தடியில் நின்றிருந்த கரிய உருவம், சாளரத்தையே குரூரத்துடன் உற்று நோக்கியது.

## 8

'திக்'கென்ற அதிர்வில் பதறிப்போன நேத்ரா, சட்டென்று நகர்ந்துகொண்டாள்.

படபடவென்று இதயம் அடித்தது.

'யாரோ கெட்ட நோக்கத்தோடு ஜன்னலையே உற்றுப் பார்க்கிறார்களே?

யாராக இருக்கும்?

நாங்கள் இங்கு வந்திருப்பதை அறிந்துகொண்டு, வாசுதேவன் தனது ஆளை அனுப்பி வேவு பார்க்கிறானோ?

அப்பாவைக் கடத்தியது போல் சிவகுருவையும் கடத்த முயற்சிக்கிறானோ?



வாசுதேவன் நினைத்திருந்தால், எங்களுக்கு முன்பாகவே இங்கு வந்து சிவகுருவைக் கடத்தி இருக்கலாமே?

வாசுதேவன் இங்கு வந்து சிவகுருவிடம் மெதுவாக ஏதாவது பேசிப் பார்த்திருப்பானோ?

அப்பாவிடம் அப்படித்தானே பேச்சை ஆரம்பித்தான். இதுபற்றி சிவகுரு ஐயாவிடம் கேட்டுப் பார்த்தால் என்ன?

மர்ம நபர் ஒருவர் அந்த ஆசிரமத்தை நோட்டம் விடுவதையும் சொல்லிவிட வேண்டும்.

எந்த நேரத்திலும், எது வேண்டுமானாலும் நடக்கும் போலிருக்கிறதே?'

மீண்டும் மெல்ல சாளரத்தின் வழியே பார்வையை செலுத்தினாள்.

அந்தக் கரிய உருவம் சுருட்டு புகைக்கிறது போலும். சிறு நெருப்புப் புள்ளி பளிச்சென்று தெரிந்தது.

காற்றுவாக்கில் நாற்றம் மிதந்து வந்து அவளது முகத்தில் மோதியது.

'ஊகூம்! கண்டிப்பாய் இதைப் பற்றி கூறி, எச்சரிக்கை செய்ய வேண்டும்.

முதலில் நரேனை அழைத்து வந்து, இதைக் காட்ட வேண்டும்.'

சாளரத்தைவிட்டு அவசரமாய் விலகினாள்.

இவள் வந்து நின்ற வேகத்தைப் பார்த்ததும் புருவங்கள் நெரிய 'என்ன?' என்பது போல பார்த்தான் நரேந்திரன்.

பதிலுக்கு மவுனமாய் சமிக்ஞை காட்டி அழைத்தாள். கையில் இருந்த மருத்துவ இதழை கீழே வைத்துவிட்டு, யோசனையுடன் அவளைப் பின்தொடர்ந்தான்.

"என்னாச்சு நேத்ரா?"

தழைந்த குரலில் கேட்டான்.

"எ... எனக்கு பயமா இருக்கு நரேன்" என்றபடி சாளரத்தை சுட்டிக் காட்டினாள்.

"ஏன் பயப்படறே? ஒருவேளை இது வழியா பாம்பு, விஷ ஜந்துக்கள்





ஏதாச்சும் புகுந்துடுமோன்னு பயப்படுறியா?"

"சேச்சே... அப்படியெல்லாம் இல்ல. ஏதோவொரு கரிய உருவம், இங்கேயே உத்து உத்துப் பார்த்துட்டு இருக்கு. சிகரெட்டோ, சுருட்டோ பிடிச்சிருக்கான். நெருப்புப் புள்ளி பளிச்சுன்னு தெரிஞ்சது."

"அப்படியா?" என்றபடியே அவனும் ஆர்வமாய் பார்த்தான்.

"எங்கே...? என் கண்ணுக்கு எதுவுமே தெரியலையே நேத்ரா?"

"அதோ... அங்கேதான்! எதிர்த்தாப்பல இருக்கிற மரத்தடியிலதான் அந்த உருவம் நின்னுட்டிருந்தது."

"யாரையும் காணோமே?"

அவனும் எட்டிப் பார்த்தான்.

'அட... யாரும் இல்லையே...! அதற்குள் அந்தக் கரிய உருவம் மறைந்துவிட்டதே?'

"நடுக்காட்டுக்குள்ள வந்து தங்கி இருக்கோமேன்னு உன் மனசுல ஒரு பயம். அதான் மரத்தடியில மரக்கிளையோட நிழலைப் பார்த்துட்டு கரிய உருவம் நிக்கிறதா நெனச்சு பயந்து இருக்கே. எல்லாம் ஒரு பயப் பிராந்திதான்."

"பயப்பிராந்தின்னே வச்சுக்கோங்க... வெறும் நிழலா இருந்தா சுருட்டு பிடிக்குமா? அதிலேர்ந்து நாத்தம் வேற வந்துச்சே? அதுவுமா பிரமையா இருக்கும்?"

"அதானே? யோசிக்க வேண்டிய விஷயம்தான்."

"வாசுதேவனோட ஆட்கள்ல எவனோ ஒருத்தன் வந்து வேவு பார்த்துட்டுப் போயிருக்கான். ஏதோ ஒரு விபரீதம் நடக்கப்

ராணி முத்து — சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1,225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.

போகுதுன்னு என் மனசுக்குப்படுது நரேன்!

சிவகுரு ஐயாகிட்டே இதைப் பத்தி சொல்லிடலாமா? இதைக் கேட்டா அவரும் ஒரு எச்சரிக்கையோட இருப்பாருல்ல?"

"மக்கு! நாம போய் சொல்லித்தான் அவருக்குத் தெரியப் போகுதாக்கும்? அவரே ஞானதிருஷ்டியில எல்லாத்தையும் பார்த்துட்டுதான் இருப்பாரு... தெரியுமா?"

கங்கையம்மாவை நேரில் சந்திக்கணும். அவங்களோட குகையையும் பார்க்கணும்னு ஆசையா இருக்கு. ஐயாகிட்டே சந்தர்ப்பம் பார்த்து அனுமதி கேட்கலாமான்னு யோசிச்சிட்டு இருக்கேன்...

பவுர்ணமி நெருங்கிட்டு வருதுல்ல, நிலா வெளிச்சம் நல்லாத்தான் இருக்கு. இன்னிக்கு நடுராத்திரியில சிவகுரு ஐயா, மூலிகைகளைப் பறிக்கறதுக்காக வெளியில போயிடுவாராம்."

"இதை யாரு சொன்னாங்க? தனியாவா போறாராம்?"

ஆவலும் திகிலுமாய் கேட்டாள் நேத்ரா.

"சாமிநாதன் என்கிட்ட சொன்னாப்பல. எப்பவுமே ஐயா மட்டும்தான் போவாராம். விடியறப்போ பிரம்ம முகூர்த்தத்துல திரும்பிடுவாராம். சில நேரங்களிலே ஒரு வாரம் கழிச்சிக்கூட வருவாராம்.

எங்க போறாரு? வனாந்தரத்துல எப்படி தங்கறாருன்னு இதுவரைக்கும் சாமிநாதனுக்குக்கூட தெரியாதாம்."

"நரேன்! அவரைவிட்டா நமக்கு வேற யாரையும் தெரியாது. அப்பாவைப் பத்தின தகவல் இன்னமும் கிடைக்கலை. இந்த நிலைமையில ஒரு வாரம் கழிச்சு திரும்ப வந்தாருன்னா... நாம என்ன செய்யறது?"

"அதனால... நீ என்ன சொல்ற வர்றே?"

"நாமளும் கூடவே போகலாமா?"

"அவரு மூலிகைகளைப் பறிக்கப் போறாராம். சாமிநாதனையே இதுவரைக்கும் அழைச்சுட்டுப் போகலையாமே? நம்மளை எப்படி அனுமதிப்பாரு?"

"ஒருவேளை சம்மதிச்சிட்டா...! சம்மதிப்பாருங்கிற நம்பிக்கை



எனக்கு இருக்கு. பகவானோட அனுக்கிரகம் நமக்கு கிடைக்குங்கிறதை-பஞ்சலிங்க தரிசனத்திலேயே தெரிஞ்சுக்கிட்டோமே?"

"சரி... உன் இஷ்டம். அவர்கிட்டயே கேட்டுப் பார்த்துடலாம்."

"ஓலைத் தடுப்பைத் தாண்டி இருவரும், சிவகுரு அமர்ந்திருக்கும் இடம் அருகே வந்து நின்றனர்.

மெல்லிய வெளிச்சத்தில், தன் பக்கம் நிழலாடியதும் நிமிர்ந்து பார்த்தார் சிவகுரு.

'எப்படி பேச்சை ஆரம்பிப்பது?' என்ற தயக்கத்தில் நேத்ராவும், நரேந்திரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். ஆனால், அதற்குள் அவராகவே கண்டுபிடித்துவிட்டார்.

"இது உசிதம்னு உங்களுக்குப்படுதா? படுதுன்னு நீங்க நெனச்சா... தாராளமா நடுராத்திரியில என்கூட வரலாம்."

"சரிங்க ஐயா"- ஒரு சேரக் கூறினார்கள் இளசுகள்.

ஆனால், உள்ளுக்குள் இருவருக்குமே 'சொரேல்' என்று திகில் ஊறியது நிஜம்!

## 9

நிலவுப் பெண், பால் ஒளியைச் சிந்தியபடி, நட்சத்திரப் பரிவாரங்களுடன் பவனி வந்தாள்.

மலையின் தரை முழுக்க இலைச் சருகுகள், சுள்ளிகள். மூவரும் நடக்கையில் பலமாக சலசலத்தன.

சப்தம் கேட்டு- ஒளிந்திருக்கும் முயல்களும், எலிகளும் திபுதிபுவென்று ஓடி நேத்ராவை அச்சப்படுத்தின.

நிலவு வெளிச்சம் கொஞ்சம் வழிகாட்டியபோதும், பனிமூட்டம் பெரிய தொல்லையாக இருந்தது.

சிவகுருவுக்கு பக்கவாட்டில் நடந்த நரேந்திரன், 'டார்ச்' விளக்கை உயிர்ப்பித்தான்.

அவனுக்குப் பின்னால் நடந்த நேத்ரா, சுற்றும் முற்றும் பார்வையால் துழாவியபடி கவனமாக பின்தொடர்ந்தாள்.

'நிலா வெளிச்சத்தில் நடுராத்திரியில்தான் மூலிகை பறிக்கணுமா? பகல் வெளிச்சத்தில் சுலபமாய் கண்டுபிடித்து பறிக்கலாமே?

ஏன் இப்ப வந்து, இடம் தெரியாமல் தேடித் தவிக்க வேண்டும்?'

மனதில் கேள்வி கேட்டபடியே நடந்தாள்.

"நிலா வெளிச்சத்துக்குன்னு ஒரு சக்தி உண்டு. அப்ப சில மூலிகைங்க எட்டிப் பார்க்கும். அதிலேயும் பவுர்ணமி அன்னிக்கு ஒருவித வீரியத்தோட பளிச்சுன்னு இருக்கும். மத்தபடி பகல் வெளிச்சத்துலே நம்ம கண்ணுக்கு சில அரிய மூலிகைகள் சரியா புலப்படுறது இல்ல."

நேத்ராவுக்குள் முளைவிட்ட கேள்விக்கு பதில் சொல்லும் விதமாய் சிவகுரு பேசியபடி மெல்ல நடந்தார்.

அவள் விழிகள் விரிய அவரையே பார்த்தபடி பயணித்தாள்.

"ஐயா! ரொம்ப ஆச்சரியமா இருக்கு. நிலா வெளிச்சத்துக்கு அவ்ளோ சக்தியா?"– என்று கேட்ட நரேந்திரனை ஏறிட்டார் சிவகுரு.

"என்ன இப்படி கேட்டுட்டே? பவுர்ணமிக்கு விசேஷ சக்தி கூடும். அதிலேயும் சித்ரா பவுர்ணமிக்கு அதிஅற்புதமான ஆற்றல் உண்டு தெரியுமா?

கோடை வெப்பத்துல தாவரமெல்லாம் அனல் கண்டு அதோட வேர்கள் ஈரத்தை முடிஞ்ச அளவு உறிஞ்சி, தண்டுப் பகுதியில் சேமிச்சு வெச்சிருக்கும். தரைப் பரப்புல நித்திய ஈரம், நிதான ஈரம், பத்திய ஈரம், பதமான ஈரம்னு பல பக்குவங்கள் இருக்கு. அதுல பத்திய ஈரம், பூமிக்கு அடியில நிலவறப்போதான் 'சந்திரகாந்தி' உருவெடுக்கும்.

ரொம்ப ரொம்ப அபூர்வமான மூலிகை. அது கிடைச்சுட்டா, அதை வச்சு வைத்தியம் செய்து பல விதமான நோய்களை குணமாக்கலாம். மனசைக் கட்டுப்படுத்தற வசிய மைகூட தயாரிக்கலாம். இப்படி எவ்வளவோ செய்யலாம் தெரியுமா?"

"அடேங்கப்பா... மனசை வசியப்படுத்தற மை தயாரிக்கலாமா? விஞ்ஞானத்துக்கு அப்பாற்பட்ட சக்தியா இருக்கே?"

"கண்டிப்பா. இந்த உலகத்துல மூலிகைகளால ஆகாதது



எதுவுமே இல்ல. ஆனா, இந்த விஷயத்துக்கு இன்ன மூலிகைன்னு விஷயம் தெரிஞ்சிருக்கணும். தெரிஞ்சுகிட்டா என்னென்னவோ பண்ணலாம்."

"கேட்கவே ரொம்ப பிரமிப்பா இருக்கய்யா" என்று மெல்லிய குரலில் முணுமுணுத்த நேத்ராவை, திரும்பிப் பார்த்துவிட்டு முறுவலித்தார் சிவகுரு.

"இதுக்கே பிரமிச்சுப் போயிட்டா எப்படி? ஒரு மூலிகையோட வேர் இருக்கு. அதை முகர்ந்து பார்த்தாலே, நாம மாயமா மறைஞ் சுடலாம். நம்ப முடியுதா இதை?"

"நீங்க சொன்னா... நம்பாம எப்படி இருக்க முடியும்? நீங்க சொல்லச் சொல்ல– அந்த வேரை நேர்ல பார்க்கணுங்கிற ஆவல் அதிகரிக்குது. இந்த மாதிரி அபூர்வ மூலிகைங்க வாசுதேவன் மாதிரி ஆளுங்க கையில் கிடைச்சா அவ்ளோதான்."

"நீ சொல்றது சரிதாம்மா. நான் சாமிநாதன்கிட்டே கூட அதிகமா பேசமாட்டேன். உங்க ரெண்டு பேருக்கும் பவித்திரமான மனசு இருக்கு. அதனாலதான் வெளிப்படையா பேசறேன். உள்ளதைச் சொல்லட்டுமா?

அபூர்வமான விஷயமெல்லாம், அபூர்வமான மனுஷங்களுக்குத்தான் கிடைக்கும். எல்லோருக்கும் கிடைக்காது. அப்படிக் கிடைச்சிட்டா, அப்புறம் ஆளாளுக்கு தப்பு பண்ணிட்டு... மூலிகை வேரைக் கொண்டு மாயமா மறைஞ்சு தப்பிச்சிக்குவாங்களே?"

பேசியபடியே தரையில் கவனமாய் பார்வையைச் செலுத்தியவாறு வந்த சிவகுரு, ஆங்காங்கே தெரிந்த சின்னச் சின்ன மூலிகைச் செடிகளைப் பறித்து தன் மூங்கில் கூடையில் போட்டுக்கொண்டார்.

அவரது பார்வை உன்னிப்பாக இங்கும் அங்குமாய் அலை பாய்ந்தது. விழிகளில்... பெரிதாக தேடி வந்தது கிடைக்காத மாதிரி ஒரு வித ஏமாற்றம் தெரிந்தது.

நடுவில் நீரோடை ஒன்று குறுக்கிட்டது. சலசலவென்ற இரைச்சலோடு கூடிய அதன் சப்தம் காதில் விழ... அதை நோக்கி மூவரும் நடந்தனர்.

பளிங்கு போன்று தெள்ளத் தெளிவாய் இருந்த நீரில், பாதம்

பதித்ததும் சில்லென்று உச்சந்தலை வரை குளிர் பாய்ந்தது.

குனிந்து நீரை அள்ளிப் பருகிவிட்டு அவள் நிமிரும் வரை அருகிலேயே நின்றிருந்தான் நரேந்திரன்.

"வா நேத்ரா! ஐயா நம்மைவிட்டு ரொம்ப தூரம் போயிடப் போறாரு. கால் ரொம்ப வலிக்குதா?"

சேலைக் கொசுவத்தை உயர்த்திப் பிடித்தபடி, அவனது கையைப் பிடித்துக்கொண்டு தடுமாறி தடுமாறி நடந்தாள் நேத்ரா.

"வந்ததிலே இருந்து ஓய்வே இல்லாம சுத்திக்கிட்டு இருக்கோம் இல்லையா... அதான்."

இருவரும் நீரோடையைக் கடந்தனர்.

அடர்ந்த செடி கொடிகளை விலக்கியபடி நடந்த சிவகுரு, ஓரிடத்தில் சட்டென்று நின்றார்.

இவர்களும் மெல்லத் தயங்கி நின்றனர்.

## 10

சிவகுரு அண்ணாந்து பார்த்தார். உயரமான மலைவேம்பு, மஞ்சக்கடம்பு மரங்கள் நிலா வெளிச்சத்தில் சந்தோஷமாய் கிளைகளை அசைத்து சாமரம் வீசிக்கொண்டிருந்தன.

தரைப் பரப்பில் சிவகுரு பரபரப்புடன் தேடினார். ஏராளமாய் மண்டிக் கிடந்த செடி கொடிகளுக்கு நடுவே பளிச்சென்று வித்தியாசமாய் ஊசலாடிக்கொண்டிருந்த 'சந்திரகாந்தி' மீது அவரது பார்வை நிலைத்தது.

தேடி வந்த பொக்கிஷம் கிடைத்துவிட்டது போன்று அவரது முகத்தில் பரம திருப்தி. விழிகளில் ஒருவித பளிச்சிடல் தென்பட்டது.

பவ்வியமாய் குனிந்து, பக்குவமாய்– மிருதுவாய் சந்திர காந்தி மூலிகைச் செடியைப் பறித்து மூங்கில் கூடைக்குள் போட்டார்.

"இதைத் தேடி எவ்ளோ அலைஞ்சேன் தெரியுமா? கிட்டத்தட்ட இருநூத்தி அம்பது பவுர்ணமி ராத்திரி அலைஞ்



சிருக்கேன். இன்னிக்குத்தான் கண்ணுல பட்டிருக்கு. நீங்க என்கூட வரும்போதுதான் இது கிடைக்கணும்னு ஒரு பிராப்தம் போலிருக்கு."

சிவகுருவின் முகத்தில் மகிழ்ச்சிக்களை தாண்டவமாடியது.

"இதைக் கண்ணால பார்க்கிறதுக்கு எங்களுக்கு குடுத்து வச்சிருக்கணுமே! விடாமுயற்சியோட சளைக்காம தேடி பல காலமா அலைஞ்சி இருக்கீங்களே!" என்றபடி அவரது மூங்கில் கூடையைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

"நீ சொன்னது ரொம்ப சரி நேத்ரா. நாம உண்மையிலேயே ரொம்ப பாக்கியம் செய்திருக்கணும். கூட வர்றதுக்கு ஐயா சம்மதிச்சது பெரிய விஷயம். அதைவிட பெரிய விஷயம் என்னன்னா... இந்த அற்புதமான மூலிகையை நாமளும் கண்ணால பார்த்துட்டோம். ஐயாவுக்கு நாம்ப நன்றி சொல்லணும்."

நரேந்திரன் சிலாகித்துப் பேசிக்கொண்டு இருந்தபோது, சலசலவென்று செடி–கொடிகள் அசையும் சப்தம் கேட்டது.

இலைச் சருகுகள் பலமாய் நொறுங்கும் ஒலியும் கேட்கவே– மூவரும் அந்தத் திசையை நோக்கி திரும்பினர்.

திமுதிமுவென்று ஏழெட்டு பேர். எதிரே வரிசையாய் வந்து நின்றனர்.

அனைவரின் கைகளிலும் கூரான கத்திகள். நிலா வெளிச்சத்தில் பளபளவென்று மின்னின.

பக்கவாட்டில் நிதானமாக நடந்து வந்து நின்றவனை ஏறிட்ட நேத்ராவுக்கு தூக்கி வாரிப்போட்டது.

"ஐயோ நரேன்... இந்தாளுதான் வாசுதேவன்."

திகிலில் மெல்ல முணுமுணுத்தாள்.

"ஓ... அப்படியா?"

"நான் அப்பவே சொன்னேன் இல்ல... ஆசிரமத்தை யாரோ வேவு பார்க்கிறாங்கன்னு! இப்ப வசமா மாட்டிக்கிட்டோமே நரேன்?"

அவனுக்கு மட்டும் கேட்கும்படி மெல்ல சொன்னாள்.

"யார் நீங்க? எதுக்காக எங்க முன்னாடி வந்து நிக்கிறீங்க?"

ஒன்றும் தெரியாதது போல் கேட்டபடியே... தோளில் கிடந்த தனது துண்டை உதறி- கழுத்தில் ஒரு மாலை மாதிரி போட்டுக்கொண்டு நேத்ராவுக்கும், நரேந்திரனுக்கும் நடுவில் வந்து நின்றார் சிவகுரு.

"என்ன மூலிகை வைத்தியரே... ஒண்ணும் தெரியாதது மாதிரி பேசறீங்க? நான் ஏற்கெனவே உங்களைச் சந்திச்சு பேசி இருக்கேன் ஞாபகம் இருக்குல்ல...?

'இளமையைக் கட்டிக் காக்கிற மூலிகைக்கும், மரணத்தை ஒத்திப்போடுற மூலிகைக்கும் விலை மதிப்பே கிடையாது. எவ்ளோ பணம் வேணும்னாலும் கொட்டித் தர்றதுக்கு நாங்க தயார். எங்களுக்கு அந்த மூலிகைகளை மட்டும் இனம் காட்டிக் கொடுங்க'ன்னு கெஞ்சினேனே? மறந்துட்டீங்களா? எடுத்தெறிஞ்சி பேசி, திட்டி அனுப்பிச்சிங்களே?"

"இதோ பாருங்க... நான் ஒரு சாதாரண வைத்தியன், அவ்வளவுதான். அரிய வகை மூலிகைகளை நீங்களோ, நானோ எல்லாம் அடையவே முடியாது. அதுக்கு பகவானோட அனுக்கிரகம் வேணும். சுயநலமில்லாத சித்தர்கள் கண்ணுக்குத்தான் தென்படும்.

எனக்கு மூலிகைகளைப் பத்தி எதுவும் தெரியாது. எங்க நேரத்தை எதுக்கு வீணடிக்கிறீங்க?"

"எதுவும் தெரியாதுன்னு அண்டப் புளுகு புளுகினா எப்படி? ஒரு குஷ்டரோகியை முழுசா நீங்க குணப்படுத்தின விவரம்... இந்தப் பகுதியில எல்லோருக்கும் தெரிஞ்சிருக்கே? அதை உங்களால் மறுக்க முடியுமா?

இப்ப இந்த ராத்திரியில, இந்த மலைக் காட்டுக்குள்ளே எதுக்கு அலையறீங்களாம்? மூலிகைகளைப் பறிக்கத்தானே வந்திருக்கீங்க?"

இளக்காரமாய் கோணல் சிரிப்பு சிரித்தபடி பேசிய வாசுதேவனை, ஏற இறங்கப் பார்த்தார் சிவகுரு.

"நான் ஏதோ சில பச்சிலைகளை வச்சு வைத்தியம் பண்ணக்கூடிய சாதாரண ஆளு. உங்களுக்குத் தேவைப்பட்ட மூலிகைகளை நீங்களே வனாந்தரத்துல அலைஞ்சி, தேடிக் கண்டுபிடிக்க



வேண்டியதுதானே?"

"ஊகூம். மயிலே மயிலேன்னு கெஞ்சினா, இறகு போடாது. லட்சம் லட்சமா கொட்டித் தர்றேன். மூலிகைகளைக் காமிச்சிக் கொடுன்னு கெஞ்சறேன். மசியவே மாட்டேங்கறான். ஆனா, அந்த தசரதனோட பொண்ணுக்கும், அவ காதலனுக்கும் இந்த மூலிகை வைத்தியன் எவ்ளோ மதிப்பு தர்றான் பார்த்தீங்களாடா? கூடவே, காட்டுக்கு அழைச்சு வந்து மூலிகை பறிக்க வந்திருக்கான்... பாருங்களேன்.

இவன் சரிப்பட்டு வரப்போறதில்லை. இவனோட கண்ணு முன்னாடியே தசரதனோட பொண்ணையும், காதலனையும் தீர்த்துக் கட்டினாத்தான் வழிக்கு வருவான்."

கண்மண் தெரியாத ஆத்திரத்தில் வாசுதேவன் சரேலென்று திரும்பி, தன் சகாக்களைப் பார்த்து உசுப்பேற்றினான்.

அவன் முதுகு காட்டி நின்றதுதான் தாமதம்.

சிவகுரு தன் இரு புறமும் நின்றிருந்த நேத்ரா- நரேந்திரன் கரத்தைப் பற்றி சட்டென்று அழுத்தினார்.

'என் கையை இறுக்கமா பிடிச்சுக்கோங்க. பின்னால இருக்கிற சரிவுல நாம இப்போ குதிக்கணும்.'

விழிகளால் அவர் சமிக்ஞை செய்ததும்... நேத்ராவும், நரேந்திரனும் எள்ளளவுகூட யோசிக்கவில்லை. கண் இமைக்கும் நேரத்தில் அவரது கையை இறுகப் பற்றியபடி பின்னால் இருந்த சரிவில் குதித்தனர்.

கும்மிருட்டில்... அது பள்ளமா அல்லது அதல பாதாளமா? என்றுகூட தெரியவில்லை.

குதிக்கும் கணத்தில் சிவகுரு, "திருச்சிற்றம்பலம்... நமச்சிவாய..." என்று உரத்துச் சொன்னது மட்டும் காதில் விழுந்தது.

பயத்திலும், திகிலிலும் நேத்ரா விழிகளை மூடியபடிதான் குதித்தாள்.

'மறுகணம் என்ன அபாயம் நேரப் போகிறது?' என்று இருவருமே சிந்திக்கவில்லை.

நேத்ராவின் மனக்கண்ணில் ஒரு கணம் தசரதன் வந்து போனார். அவளது மனம் முற்றிலுமாக மருந்துமலை ஈசனை தஞ்சம்

அடைந்திருந்தது.

சிவகுருவை மலை போல் நம்பி இருந்தாள்.

காற்றைக் கிழித்துக்கொண்டு உச்சியில் இருந்து விழும்போது, அடி வயிற்றில் குடல் முடிச்சுப் போட்டுக்கொண்டது போன்ற உணர்வு ஏற்பட்டதால்–

சட்டென்று அவள் மூர்ச்சை ஆனாள்.

## 11

**வ**னாந்தரத்துப் பறவைகள், பூபாள ராகம் இசைத்து– இன்னிசை கீதம் பாடிக்கொண்டிருந்தன.

விழிகளை மெல்ல மலர்த்தினாள் நேத்ரா.

'எங்கே இருக்கிறேன் நான்?'

ஆசிரமத்தில் ஓலைத் தடுப்புக்கு அப்பால், தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பாயில் படுத்துக் கிடப்பதை உணர்ந்தாள்.

சாளரத்தின் வழியே இளம் காலை வெளிச்சம் உரிமையாய் உள்ளே நுழைந்திருந்ததைக் கண்டதும், வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள்.

'இங்கு எப்படி வந்தேன்?'

'நரேன் என்ன ஆனார்?'

சிவகுருவின் கைகளைப் பற்றியபடி உச்சியில் இருந்து குதித்தோமே... அப்புறம் என்ன ஆயிற்று?

ஒருவேளை, இதெல்லாம் என் கனவாக இருக்குமோ...அடித்துப் போட்டது போல இவ்வளவு நேரம் தூங்கிட்டேனே? இங்கு யாரையுமே காணாமே?'

அவசரமாய் வாசலில் வந்து நின்றாள்.

எதிரே வில்வ மரத்தில் இருந்து இலைகளை பறித்துக்கொண்டிருந்தான் சாமிநாதன்.

சுற்றும் பார்த்தாள் நேத்ரா. பக்கவாட்டில்...

ஈரத்துணிகளைப் பிழிந்து மரக்கிளைகளுக்கு இடையே



கட்டப்பட்டிருந்த காட்டுக்கொடியில், காயப் போட்ட நரேந்திரனின் எதிரே போய் நின்றாள்.

"பக்கத்துல அழகான சுனை ஒண்ணு இருக்கு. குளிச்சிட்டு வந்தேன். சுனையை நீ பார்த்தேன்னா... அதைவிட்டு சாமானியத்துல நகரவேமாட்டே தெரியுமா?

நான் அப்பவே எழுந்துட்டேன். நீ அசந்துபோய் தூங்கிட்டிருந்தே! எழுப்ப மனசு வரலை. வந்த வேலை முடிஞ்சிட்டாக்கூட, இங்கிருந்து கிளம்ப மனமே வராது போலிருக்கே! போறபோக்கைப் பார்த்தா மனசு மாறி, சாமிநாதன் மாதிரி இங்கேயே நிரந்தரமாக தங்கிடுவோம்னு தோணுது நேத்ரா."

கண் இமைக்காமல், அவனது முகத்தையே ஊன்றிப் பார்த்தாள்.

"என்ன நரேன்... இவ்ளோ சர்வ சாதாரணமா பேசிட்டு இருக்கிங்க. நேத்து என்னென்னவோ களேபரங்கள் நடந்துச்சே? ஒண்ணுமே நடக்காத மாதிரி இருக்கிங்களே?

நடந்ததெல்லாம் கனவா... நனவான்னு நான் குழம்பித் தவிச்சிக்கிட்டு இருக்கேன். மூணு பேரும் கையைப் பிடிச்சிக்கிட்டு, சரிவுல குதிச்சோமே? அப்படி குதிக்காம இருந்திருந்தா, என்னாகி இருப்போம்னு நெனைச்சா பகீர்னு ஆகுது.

நீங்க என்னடான்னா... சுனையில குளிச்சிட்டு, ஈரத்துணியை உலர்த்திக்கிட்டு ரொம்ப சாதாரணமா பேசிட்டு இருக்கிங்க?"

"எப்பவுமே நடந்து முடிஞ்சதைப் பத்தியே நெனைச்சுக்கிட்டு இருக்கக்கூடாது. நடக்கப் போறதைப் பத்திதான் யோசிக்கணும்."

முறுவலித்தான்.

"விளையாடாதிங்க நரேன். எவ்ளோ பெரிய சம்பவம் நடந்திருக்கு. அதுசரி... நாம இங்கே எப்படி வந்தோம்? குதிக்கும்போதே திகில்ல எனக்கு நினைவு தப்பிடுச்சு."

அவன் அசடு வழிய சிரித்துவிட்டு, குரலை ஏகத்திற்கும் தழைத்துக்கொண்டு பேசினான்.

"இதைச் சொல்வதற்கு எனக்கு வெட்கமாகத்தான் இருக்கு. குதிக்கும்போது எனக்கும் பயமாகத்தான் இருந்துச்சு. என்னையும் அறியாம கண்ணை இறுக்கமா மூடிக்கிட்டேன்.

கண்ணை முழிச்சுப் பார்க்கும்போது ஆசிரமத்தில் படுத்திருக்கேன். உன்னை மாதிரியே நானும் மயக்கம் போட்டுட்டேன்னுதான் தோணுது. ஒரு ஆம்பளைக்குப் போய் இப்படி பயம் வரலாமான்னு என்னை நானே சாடிக்கிட்டு இருக்கேன்."

"பயங்கறது மனித இயல்புதானே? இதிலென்ன கவுரவ குறைச்சல் இருக்கு நரேன்? சினிமாவுல வர்ற கதாநாயகர்கள், பல நூறு அடி உயரத்துல இருந்து 'டைவ்' அடிச்சிட்டு- சிரிச்ச முகத்தோட எழுந்து நடக்கற மாதிரி காட்டுறாங்க. அதெல்லாம் சாத்தியப்படற விஷயமா?

சரி... அதை விட்டுத் தள்ளுங்க. நேத்து ராத்திரியில எவ்ளோ தூரம் மலைக் காட்டுக்குள்ளே போனோம்? நாம குதிச்ச இடத்துக்கும், இந்த ஆசிரமத்துக்கும் இடைப்பட்ட தூரத்தை நெனைச்சாலே மலைப்பா இருக்கே? நம்ம ரெண்டு பேரையும் அங்கிருந்து இங்கே கொண்டுவந்து சேர்த்தது சிவகுரு ஐயாவாகத்தான் இருக்கும்... இல்லையா?"

"நிச்சயமா."

"வாசுதேவன் இப்போ ஏகப்பட்ட கோபத்துல இருப்பான். ஏமாற்றத்திலேயும், ஆத்திரத்திலேயும் அப்பாவை ஏதாச்சும் பண்ணிடுவானோன்னு ரொம்ப பயமா இருக்கு."

ஒரு சித்தரோட அன்பும், அருட்கடாட்சமும் கிடைச்சிருக்கே? இது எவ்வளவு பெரிய விஷயம்? ஆக, நல்லதே நடக்கும்னு நம்புவோம்.

கங்கையம்மாவை ஒரு தடவை நேர்லே பார்த்துட்டோம்னா, எல்லா பிரச்சினைக்கும் ஒரு தீர்வு கிடைக்கும்னு என் மனசுக்குப் படுது."

"பவுர்ணமி அன்னிக்கு நடுஜாமத்துல மருந்து மலையில பஞ்சலிங்க தரிசனத்துக்கு அவங்க வருவாங்கல்ல... அங்கே வச்சு பார்த்துட்டா போச்சு."

"ஊகும்... அவங்க இடத்துக்கே போய் பார்க்கிறதுதான் நல்லதுன்னு என் மனசுக்குப்படுது."

"மருந்து மலை சரிவுக்கு மறுபக்கமா இறங்கி பயங்கரமான அடர்ந்த காட்டுக்குள்ள இருக்கிற அந்தக் குகையை எப்படித் தேடிக்



கண்டுபிடிக்கிறதாம்?"

"முயற்சி பண்ணினா முடியாதது ஒண்ணுமே இல்ல. மருந்து மலை சிவன் மேல பாரத்தைப் போட்டுட்டு, காரியத்துல இறங்கினா... தன்னால வழி தெரிஞ்சிட்டுப் போகுது."

"சிவகுரு ஐயாகிட்டே அனுமதி கேட்க வேணாமா?"

"நம்மளை இங்கே கொண்டு வந்து சேர்த்த கையோட அவரு திரும்பவும் கிளம்பிப் போயிட்டாராம். மூலிகை பறிக்கிறதிலே நேத்து தடை வந்துட்டதால, இனி இப்போதைக்கு ஆசிரமத்துக்கு திரும்பி வரமாட்டாராம். ஒரு வாரம்கூட ஆகலாமாம்! அப்படின்னு சாமிநாதன் சொல்லிட்டு இருந்தாரு."

"அதனால அவரோட அனுமதியை எதிர்பார்க்காம நாமளே அந்தக் குகையைத் தேடிப் போகலாம்னு சொல்றீங்களா?"

"போக வேண்டியதுதான். ஆனா, அதுல ஒரு சின்ன திருத்தம். இந்தத் தடவை நான் மட்டும்தான் போகப் போறேன்."

"இ... இல்ல நரேன்! நான் இதுக்கு ஒருக்காலும் ஒத்துக்கவே மாட்டேன். அப்பாவை மீட்க முடியாம இன்னமும் தவிச்சுட்டிருக்கோம். நீங்க தனியா போயி... ஆபத்துல மாட்டிக்கிட்டீங்கன்னா என்னாகும்? ரெண்டு பேரும் சேர்ந்து வேணும்னா போகலாம்."

"உன்னைக் கூட்டிட்டுப் போக நான் தயாரா இல்ல நேத்ரா! நேத்து ராத்திரியில அந்த வாசுதேவனோடு எத்தனை தடியங்க இருந்தாங்க? அவங்க உன்னைப் பார்த்த பார்வையே சரியில்ல. வேணாம். நீ கூட வர்றது நல்லதில்லை."

"உங்களை மட்டும் தனியா அனுப்பிட்டு- நான் எப்படி நிம்மதியா இருக்க முடியும்? என்ன ஆச்சோ... ஏதாச்சோ...அப்படின்னு உயிரைக் கையில பிடிச்சுக்கிட்டு தவிக்கணும். அப்படித் தவிக்கிறதுக்கு பேசாம நானும் உங்கக் கூடவே வந்துடறேனே?"

"என்ன நேத்ரா... புரிஞ்சுக்காம பேசறியே? நீ ஒரு அழகான இளம்பெண். சும்மா தேவதை மாதிரி ஜொலிக்கிறே! உனக்கு வேற விதமான ஆபத்து ஏற்படும்னு எச்சரிக்கிறேன். நானும்கூட வர்றேன்னு மறுபடியும், மறுபடியும் அடம் பண்ணுறியே?"

"வருங்கால மனைவியோட கண்ணீரைத் துடைக்கிறதுக்காக
காட்டுக்குள்ள நீங்க வந்து இவ்ளோ மெனக்கெடறதைப் பார்த்தா...
உன்னூர எனக்கு உறுத்தலாதான் இருக்கு. போதும்ப்பா. உங்களைத்
தனியா அனுப்ப நான் தயாரா இல்ல.

சிவகுரு ஐயா வர்ற வரைக்கும் காத்திருக்கலாம். நாமளா எந்த
முடிவும் எடுக்கறது தப்பு. அவர்கிட்டே கலந்துக்காம நாம எதையும்
செய்யக்கூடாது நரேன்."

திட்டவட்டமாகப் பேசியவளைப் பார்த்து, இதமாக முறுவல்
பூத்தான்.

"சரி... உன் இஷ்டம்! ரொம்ப பதற்றப்படாதே. சுனையில
குளிச்சுடறியா? வா... துணைக்கு வர்றேன். குளிச்சு தயாரானதும்
சாமிநாதன் தர்ற காய்கனிகளைக் கொறிச்சிட்டு, மூலிகை மருந்து
தயாரிக்கிறதிலே கூடமாட ஒத்தாசை பண்ணிட்டு இருக்கலாம்."

"ஒத்தாசையா! நம்மால என்ன செய்ய முடியும்?

"இடிக்கிறது... பொடிக்கிறது... அரைக்கிறதுன்னு நம்மால
முடிஞ்ச சின்னச் சின்ன உதவிகள் செய்து பொழுதைப் போக்க
வேண்டியதுதான்."

"சரி... இதோ நானும் தயாராகி வந்துடறேன்" என்றபடி
பர்ணசாலைக்குள் புகுந்தாள் நேத்ரா.

விரைவில்... ஆருயிர்க் காதலனைப் பிரிந்து வனாந்தரத்தில்
நிர்க்கதியாய் நிற்கப் போகிறோம் என்று அவள் கனவிலும்
நினைக்கவில்லை.

## 12

நேரம் நத்தையாய் நகர்ந்துகொண்டிருந்தது.

"மூலிகை மருந்து தயாரிக்கும்போது, விடாம மனசுக்குள்ளே
மந்திர உச்சாடனம் பண்ணிக்கிட்டே இருக்கணும். அப்பதான்
அதுலே சக்தி கூடும்னு சிவகுரு ஐயா சொல்வாங்க.

அரைக்கிறது– இடிக்கிறதுல ஒரு பக்குவம் இருக்கு. கொஞ்சம்



தவறினாலும், மூலிகை மருந்து வேலை செய்யாது. நீங்க எனக்கு
உதவியே ஆகணும்னு பிரியப்பட்டா– அதோ அந்தப் படிகாரக்
கல்லை வேணும்னா உடைச்சி, தூள் பண்ணிக் கொடுங்க. அதுவே
போதும்."

சாமிநாதன், நரேந்திரனிடம் மெல்லிய குரலில் கூறிவிட்டு–
ஏதேதோ பச்சிலைகளில் இருந்து மென்மையான நரம்புகளை
கவனமாய் நீக்கிவிட்டு, வட்ட வடிவக் கல்லில் வைத்து
அரைக்கலானான்.

'அப்பாவை எப்படி மீட்கப் போகிறோம்? வாசுதேவன்– அவரை
இந்தக் காட்டில் எந்த இடத்தில் மறைத்து வைத்துக் கொடுமை
செய்கிறானோ? சிவகுரு ஐயா எப்போது திரும்ப வருவார்?
உச்சியில் இருந்து குதிக்கும்போது, மரம்– செடி கொடிகளை
உரசிக்கொண்டுதானே கீழே வந்தோம்? சிராய்ப்போ– சின்ன
காயமோகூட ஏற்படாமல் எப்படி எங்களைக் காப்பாற்றி, இந்த
ஆசிரமத்துக்கு கொண்டு வந்து சேர்த்தார்?'– இப்படி பலவித
கேள்விகள் அவளுக்குள் எழுந்தன.

அப்பாவிடம் சிவகுரு நட்பு ரீதியாகப் பழகி இருக்கிறார்.
நண்பனின் மகள், மருமகன் மீது அதிக அக்கறையும், சிரத்தையும்
காட்டுகிறார்.

அந்தப் பெரிய கும்பலிடம் இருந்து, சின்னத் தூசு கூடப் படாமல்
எங்களைக் காப்பாற்றி இருக்கிறாரே?

இது சாதாரண மனிதரால் சாத்தியப்படுமா?

ஊகூம்... இவர் சித்தரேதான்!

சரி... இவ்வளவு சக்தி வாய்ந்தவரால், அப்பாவை அவர்களிடம்
இருந்து மீட்க முடியாதா என்ன? அது ஒன்றும் பெரிய விஷயமே
இல்லையே? நண்பனை அந்தக் கயவர்களிடம் இருந்து உடனடியாக
காப்பாற்றி கொண்டுவராமல்... ஏன் காலதாமதம் செய்கிறார் என்று
புரியவில்லையே? மனதில் என்ன நினைத்தாலும், மறுகணமே
அவருக்கு தெரிந்துவிடுகிறது.

அப்பாவை நினைத்து வேதனையில் நான் துடிதுடித்துக்கொண்டு
இருப்பது, அவருக்கும் தெரிந்துதானே இருக்கும்? இருந்தும் அவரைக்
காப்பாற்ற முயற்சி செய்யாமல் இருக்கிறாரே? என்ன காரணமாக

இருக்கும்? எங்கள் மீது இவ்வளவு அக்கறை காட்டுபவர், நண்பர் மீது சின்ன ஆர்வம்கூட காட்டாமல் இருப்பது ஏன்?

இவர் இப்படி இருப்பதற்கு ஏதோ முக்கியமான காரணம் இருக்க வேண்டும் என்றுதான் தோன்றுகிறது. அதை வெளிப்படையாக சொன்னாலாவது ஓரளவுக்கு நிம்மதியாக இருக்கலாமே?

அவர் வந்ததும், இதை கேட்டுவிட வேண்டியதுதான்!

ஐயோ... நான் ஒரு மக்கு. இப்படி நினைப்பதுகூட இந்நேரத்திற்கு அவருக்குத் தெரிந்திருக்குமே?

தப்பு... தப்பு! இந்த அளவுக்கு அவர் அடைக்கலம் கொடுத்து தங்க வைத்து, அந்தக் கயவர்களிடம் இருந்து காப்பாற்றியதே பெரிய விஷயம்.

நடப்பது நடக்கட்டும். அந்த சிவன் மீதும், சிவகுரு மீதும் நம்பிக்கை வைத்து காத்திருக்க வேண்டியதுதான்!

வேறு வழியே இல்லை...'

தனக்குள் எண்ணியபடியே– பச்சிலைகளை சாமிநாதன் விழுதாக அரைப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள் நேத்ரா.

படிகாரக் கல்லை இடித்துப் பொடியாக்கிவிட்டு, நெற்றி சுருங்க தீவிர சிந்தனையில் மூழ்கியபடியே நரேந்திரன் அவ்வப்போது ஆசிரமத்தின் வாசலையே நோட்டமிட்டபடி இருந்தான்.

அன்று முழுக்க சிவகுரு வரவே இல்லை.

இரவு ஒன்பது மணிக்கே தூக்கம் கண்களை அசத்த– கைக்கடிகாரத்தில் பார்வையைப் பதித்தவள், மெல்ல அவனது புஜத்தில் தட்டினாள்.

"தூக்கமா வருது நரேன். நான் போய் படுத்துக்கட்டுமா?"

"தாராளமா. எனக்கு தூக்கம் வர்ற வரைக்கும், இப்படியே வேடிக்கை பார்த்துட்டு, அப்புறமா நானும் தூங்கறேன். சாளரத்து வழியா எட்டிப் பார்த்துட்டு வீணா மனசு சஞ்சலப்படாம நிம்மதியா தூங்கு... சரியா?"

"சரி... போகிறேன்."

தலையாட்டிவிட்டு, ஓலைத் தடுப்புக்கு அப்பால் சென்று ஒருக்களித்துப் படுத்தாள்.



காற்று வெளியே பலமாய் வீசியதால், மரக்கிளைகள் பயங்கரமாய் அசையும் சப்தம் தெளிவாகக் கேட்டது.

அன்று ஏனோ தெரியவில்லை... படுத்ததுமே தூக்கம் அவனை ஆரத் தழுவிக்கொண்டது.

## 13

ஒரு மணி நேரம் கடந்ததும், சட்டென்று நரேந்திரன் எழுந்தான்.

அதே நேரத்தில் சாமிநாதன் தனது பணிகளை முடித்துவிட்டு, ஓலைப் பாயை விரித்துக்கொண்டிருந்தான்.

"என்கிட்ட முடிக்கச் சொன்ன வேலையை முடிச்சாச்சு. இனி மேற்கொண்டு ஐயா வந்து உத்தரவிட்ட பின்னாடிதான் வேறு எந்த வேலையும் செய்யணும்."

பேசியபடியே ஆசிரமத்தின் ஓலைக் கதவை வெறுமனே சாத்திவிட்டு வந்தான்.

"என்ன சார்? ஏதோ யோசனை பண்ணிட்டு இருக்கீங்க?"

நரேந்திரனை ஏறிட்டான் சாமிநாதன்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தடுமாறி திணறியபோது, சாமிநாதனே தொடர்ந்தான்.

"என்னடா இது... நடுக்காட்டுக்குள்ள இருக்காங்களே? இவங்களுக்கு காட்டு மிருகங்களாலும், மத்தவங்களாலும் இதுவரைக்கும் ஆபத்தே ஏற்பட்டது இல்லையா? கொஞ்சங்கூட பயமே இல்லாம இருக்காங்களேன்னு நீங்க ஆச்சரியப்படுறீங்க... இல்லையா சார்?"

"ஆமா..."

"அரிய வகை மூலிகைகளோட வேர்க்கட்டுகளை உள்ளார அடுக்கி வச்சிருக்கோம். அந்த வாசனைக்கு இந்த ஆசிரமத்தைச் சுற்றிலும் எந்த வித விஷ ஜந்துக்களும் பக்கத்துல அணுகவே அணுகாது.

அதுவும் தவிர சிவகுரு ஐயா சதா சர்வகாலமும் மந்திர

உச்சாடனம் பண்ணிட்டே இருப்பாரு. அவர்கிட்ட சக்தி இருக்கு. தீய எண்ணத்தோடு யாரும் கிட்டே போக முடியாது. ஆசிரமத்தைச் சுற்றி, கண்ணுக்குத் தெரியாத ஒரு பாதுகாப்பு வளையம் இருக்குன்னே சொல்லலாம்.

அதனால எந்த ஆபத்தும் இதுவரைக்கும் வந்ததில்ல. இனிமேலும் வரவே வராதுன்னு உறுதியா நம்பலாம் சார்."

"எனக்கு அந்த நம்பிக்கை நேத்தைக்கே வந்தாச்சு" புன்னகைத்தான்.

"நல்லது சார். படுத்துக்கலாமா? அதோ அந்த மண் கூஜாவுல தண்ணி இருக்கு. வேற ஏதாச்சும் உங்களுக்கு தேவைப்பட்டா தயங்காம கேளுங்க."

"ருசியான காட்டுப் பழங்களைச் சாப்பிட்டு, வயிறு நிறைவா இருக்கு. இப்போதைக்கு வேற எதுவும் தேவையில்லை. நன்றி!"

"நன்றி எல்லாம் சொல்லாதீங்க. இது என் கடமை. சிவகுரு ஐயா உங்களை நல்லபடியா கவனிச்சுக்க சொல்லி இருக்காரே?படுத்துக்கோங்க."

"சரி."

ஓலைப்பாயில் மல்லாந்து படுத்து, மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக்கொண்டான்.

'கங்கையம்மா, பஞ்சலிங்க தரிசனத்துக்கு வராமல் இருந்துவிட்டால் என்ன செய்வது?

அந்தம்மாவை எப்படியும் பார்த்துவிட வேண்டுமே? அவர் இருக்கும் குகையைத் தேடிப் போக வேண்டியதுதான்.

நேத்ராவை உடன் அழைத்துச் சென்றால், வழியில் என்னென்ன ஆபத்து காத்திருக்கிறதோ... யார் கண்டது?

தனியாகச் செல்கிறேன் என்றால், அதற்கு சம்மதிக்கவே மாட்டேங்கிறாளே?

இவளுக்குத் தெரியாமல் நான் இப்போதே கிளம்பிப் போக வேண்டியதுதான். இதுதான் சரியான காரியம்.

வழியில் எது நடந்தாலும் எதிர்கொள்ள வேண்டியதுதான். மருந்து மலை சிவன் மீது பாரத்தைப் போட்டு, துணிந்து செல்ல



வேண்டியதுதான். அதை விட்டுவிட்டு ஆசிரமத்திற்கு உள்ளேயே உட்கார்ந்து பொழுதைக் கடத்துவது முட்டாள்தனம் அல்லவா? நேத்ரா இங்கு பாதுகாப்பாக இருக்கிறாளே? அதுபோதும் எனக்கு...'

பக்கவாட்டில் மெல்லத் திரும்பிப் பார்த்தான் நரேந்திரன்.

சீரான குறட்டை ஒலி எழுப்பியபடி, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான் சாமிநாதன்.

விருட்டென்று எழுந்து ஓசைப்படாமல் நடந்து ஓலைத் தடுப்புக்கு அப்பால் படுத்திருந்த நேத்ராவை நோட்டமிட்டான்.

"நேத்ரா... நேத்ரா."

இரு முறை அழைத்துப் பார்த்தான்.

பதில் இல்லை.

'பாவம்! அடிச்சிப் போட்ட மாதிரி தூங்கறா...'– தனக்குள் முணுமுணுத்துவிட்டு, பூனைப் பாதம் வைத்து நடந்து ஆசிரமத்தின் கதவை விலக்கி வெளிப்பட்டான்.

பின்னர் அந்தக் கதவை வெறுமனே சாத்திவிட்டு, சுற்றும் முற்றும் பார்த்தான்.

'அடர்ந்த இந்தக் காட்டுக்குள் பகலில் சென்றாலே எதையும் எளிதில் கண்டுபிடிப்பது கஷ்டமாச்சே? இருட்டில் வழியும் தெரியாது... வாய்க்காலும் தெரியாதே? குகையை எப்படி தேடப்போறேன்?

ஊகூம். முன் வைத்த காலை பின்வைக்கவே கூடாது. முதலில் மருந்து மலையின் உச்சிக்குச் செல்ல வேண்டியதுதான்.'

யோசித்தபடியே விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தான்.

அடிவாரத்தில் இருந்த ஆசிரமத்தின் மீது ஒரு கணம் பார்வையைப் பதித்துவிட்டு, செடி– கொடி, புதர்கள் அடர்ந்த மலைப் பாதை மீது மெல்ல ஏறலானான்.

இருளில், ஒரு ஜோடி கண்கள் அவன் செல்லும் திக்கையே உற்று நோக்கின.

அந்தக் கண்கள் நிலா வெளிச்சத்தில்– பளபளவென்று மின்னின.

# 14

நேரம் நகர நகர நேத்ராவுக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

'நரேன் எங்கே போய்விட்டார்?

ஒருவேளை... சாமிநாதனுக்கு உதவுவதற்காக காய்கனிகளையோ, வில்வ இலைகளையோ பறிக்கச் சென்றுவிட்டாரோ?

அதோ சாமிநாதன் மட்டும் பழங்களைப் பறித்துக்கொண்டு தனியாக வருகிறாரே?'

ஓட்டமும், நடையுமாக அவன் எதிரே போய் நின்றாள்.

"உங்கக்கூட நரேன் வரலையா?"

"இல்லையே! முழிக்கும்போது, என் பக்கத்துல அவர் இல்லை. நான் சுனையில குளியல் போட்டுட்டு, நேரா போய் பழம் பறிச்சிட்டு இப்பதான் வரேன்...

புது இடம் என்கிறதால சீக்கிரமா எழுந்து, காத்தாட உலாவப் போய் இருக்கலாம். பதற்றப் படாம இருங்க. வந்துடுவாரு."

'அப்படியும் இருக்கலாமோ? என்னிடம் ஒரு வார்த்தைக்கூட சொல்லாமல், ஆசிரமத்தைவிட்டு ஏன் இவர் வெளியில் செல்கிறார்?'

முணுக் என்று உள்ளூர கோபம் முளைத்தது.

மாற்று உடை எடுத்துக்கொண்டு- சுனைக்குச் சென்று அவசரமாய் குளியல் போட்டுவிட்டு திரும்பி வந்தபோது, அவளுக்கு ஏமாற்றம்தான் காத்திருந்தது.

'நரேன் இன்னமும் வரலையே? விடியற்காலையில எழுந்து உலாவப் போனது மாதிரி தெரியலையே? ஒருவேளை... நடுராத்திரியில் எழுந்து கங்கையம்மா இருக்கும் குகையைத் தேடிப் போய்விட்டாரா? அப்படித்தான் இருக்க வேண்டும்.

அவரைத் தனியாகப் போக வேண்டாம் என்று நேற்று தடுத்தபோதே, முகம் சரியில்லையே? அதற்குப் பின்பு என்னிடம் சரியாக பேசவில்லையே? ஏதோ தீவிர யோசனையிலேயே



முழுசப் போய் இருந்தாரே? நடுநிசியில் எழுந்து- என்னிடம சொன்னால் தடுத்துவிடுவேன் என்று சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டாரே? ஏன் இன்னமும் திரும்பி வரவில்லை? சென்ற இடத்தில் அவருக்கு ஏதாச்சும் ஆபத்து ஏற்பட்டிருக்குமோ?

ஐயோ... இதற்குத்தானே அவரைத் தடுத்தேன்? போகும் வழியில் வாசுதேவனின் சகாக்களிடம் மாட்டிக்கொண்டாரோ?

ஐயையோ... அப்படி சிக்கி இருந்தால்?

இந்த நேரத்திற்கு அந்த வெறி பிடித்த பாவிகள், அவரைக் கொன்றே போட்டிருப்பார்களே? ஒருவேளை காட்டு மிருகங்களாலும், விஷ ஜந்துக்களாலும்கூட ஆபத்து ஏற்பட்டு இருக்கலாமே? அவருக்கு ஏதோ நேர்ந்துவிட்டது. அதனால்தான் அவரால் திரும்பி வரமுடியவில்லை. விடிவதற்குள் வந்துவிடலாம் என்ற நம்பிக்கையில் வெளியே சென்றிருக்கிறார் போலும்.

ஆனால்...

என்னவென்றே தெரியவில்லையே!

ஐயோ... நான் என்ன செய்யப் போகிறேன்? அப்பாவைத் தேடிக் காட்டுக்குள் வந்தோம். அவரைப் பற்றியே இன்னும் ஒரு துப்பும் துலங்கவில்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டு இருக்கும் நேரத்தில்... நரேனைப் பறிகொடுத்துவிட்டேனே?

நரேன்... நரேன்... ஏன் என்னைத் தனியா தவிக்க விட்டுட்டுப் போனீங்க? உங்களுக்கு ஏதாச்சும் ஒண்ணு ஆகிடுச்சின்னா... அதை என்னால தாங்கவே முடியாது. மறுகணமே என் உயிரை விட்டுருவேன்.

ஐயோ! என் மனசாட்சி அறுக்குதே? இந்த ஆபத்து என்னாலதானே உங்களுக்கு? எனக்காக... என் அப்பாவுக்காக... நடுக்காட்டுக்குள்ள வந்து ஆபத்துல மாட்டிக்கிட்டீங்களே?

இப்போ உங்களையும், அப்பாவையும் நான் எப்படி கண்டுபிடிக்கப் போறேன்? உங்க ரெண்டு பேரையும் ஆபத்துல இருந்து மீட்க முடியுமா?

எங்கே... எப்படி? எந்த ஆபத்துல மாட்டி இருக்கீங்கன்னு எனக்குத் தெரியாதே!

முதல்லே... நீங்க இப்போ உயிரோட இருக்கீங்களான்னுகூட

சந்தேகமா வருதே?

நிச்சயமா உயிரோடதான் இருப்பீங்க. நான் உங்களை மனப்பூர்வமா ஆத்மார்த்தமா நேசிக்கிறேன்.

என் காதலை, அன்பை நேர்லேயோ, போன் மூலமோ அதிகமா வெளிப்படுத்த மாட்டேங்கிறேன்னு நீங்க அடிக்கடி என்கிட்ட வருத்தப்படுவீங்க. ஆனா, உண்மையிலேயே உங்களை என் உயிருக்கும் மேலா நேசிக்கிறேன்!

உள்ளுணர்வு என்கிட்ட சொல்லுது... நீங்க நிச்சயமா நல்லபடிதான் இருப்பீங்க. உங்களுக்கு எதுவும் ஆகி இருக்காது. பகவான் என்னைக் கைவிட மாட்டாருன்னு நம்பறேன்.

நரேன்... நீங்களும் என் மேல உயிரையே வச்சிருக்கீங்களே! நீங்க இப்படிச் செய்யலாமா? இப்பவே என் பாதி உயிர் போயிடுச்சு தெரியுமா? யாரோ பலவந்தமா என்னைப் பிடிச்சு நெருப்பாற்றிலே தள்ளிவிட்டாப்பல இருக்கு. வேதனையில் புழுவா துடிதுடிக்கிறேன்.

நீங்கதான் என் ஜீவன். நீங்கதான் என் ஆதாரம். நீங்கதான் எனக்கு சகலமும்...!

நீங்க இல்லாம என்னால ஒரு நிமிஷம்கூட இந்த பூமியிலே வாழ முடியாது. உங்களுக்கு என்ன ஆச்சோ? அது எனக்கும் ஆகட்டும். இதோ, நானும் கிளம்பி வர்றேன்...'

தனக்குள் தீர்மானித்துக்கொண்டவள்– தாரை தாரையாக கண்ணீர் வழிய– ஆசிரமத்தின் வாசலை நோக்கி விரைந்தாள்.

அங்கே...

## 15

குறுக்கே கையை நீட்டித் தடுத்தான் சாமிநாதன்.

"எங்கேம்மா போறீங்க? நரேந்திரனைத் தேடிக்கிட்டு அலையப் போறீங்களா? வயசுப் பொண்ணைக் கூடவே கூட்டிக்கிட்டுப் போனா, அது நல்லதில்லைன்னு நெனச்சுதானே உங்களை அவர்



இங்கேயே விட்டுட்டுப் போனாரு?

ஆசிரமத்திலே நீங்க பாதுகாப்பா இருப்பீங்கன்னு நம்பி, நடுராத்திரியிலே எழுந்து போய் இருக்காரு. அவரு எப்படியும் திரும்பி வந்துடுவாருன்னு நம்பிக்கையோட பொறுமையா காத்திருங்க."

"என் மனசெல்லாம் பதறுதே? எப்படி நிம்மதியா இருக்க முடியும்?"

"அதுக்காக...? திக்குத் தெரியாத காட்டுல எங்கே போய் தேடுவீங்க? சிவகுரு ஐயா எந்த நேரத்திலும் திரும்பி வந்துடுவாரு. அவரு வந்ததும் உங்களைப் பத்தி கேட்டா... நான் என்ன பதில் சொல்றது? 'வயசுப் பொண்ணை வனாந்தரத்துக்குள் போறதுக்கு எப்படி நீ அனுமதிச்சே?'ன்னு கேட்டு, என்னை ரொம்பவும் கோவிச்சுப்பாரு."

"எங்க அப்பாவைப் பத்தி ஒரு விவரமும் தெரியலை. எனக்காக காட்டுக்கு வந்த நரேனும் காணாம போயிட்டாரே? எல்லாம் என்னாலதான். நான் மட்டும் இங்கே பாதுகாப்பா இருந்து என்னத்தை சாதிக்கப்போறேன்?"


தழுதழுத்த குரலில் பேசிய நேத்ரா, அழுகையை அடக்க முடியாமல் கேவினாள்.

"ஐயாவுக்கு உங்க மேல தனிப் பிரியம். இதுவரைக்கும் அவரு இங்கே வேற யாரையுமே தங்க அனுமதிச்சதில்லை. 'இந்த ஆசிரமத்துக்குன்னு ஒரு புனிதம் இருக்கு. கண்டவங்களையும் உள்ளே அனுமதிச்சா... இதோட புனிதம் கெட்டுரும்'னு ரொம்ப கண்டிப்பா இருப்பாரு.

உங்களை அனுமதிச்சாருன்னா, அதுக்கு முக்கியமான காரணம் இருக்கு. கள்ளம், கபடம் இல்லாம நேர்மையா – பக்தியா பகவானோட அனுக்கிரகத்திற்கு பாத்திரமானவங்களை சிவகுரு ஐயாவுக்கு ரொம்பவும் பிடிக்கும்.

அப்படிப்பட்டவங்களை ரொம்பவும் அழவிட்டு அவரு வேடிக்கை பார்க்க மாட்டாரும்மா. கொஞ்சம் பொறுமையா இருங்க. அவர் வந்துட்டா, உங்க பிரச்சினைகளுக்கு எல்லாம் ஒரு முடிவு வந்துடும். கவலைப்படாதீங்க.

தயவுசெஞ்சு மனசைத் தளரவிடாதீங்க. உள்ளே





"போங்கம்மா."

பரிவுடன் பேசிய சாமிநாதனை ஒரு கணம் ஏறிட்ட நேத்ரா, சேலைத் தலைப்பால் தன் கண்ணீரைத் துடைத்தபடி ஓலைத் தடுப்புக்கு அப்பால் சென்று அமர்ந்தாள்.

மனக்கண்ணில் நரேந்திரன் சிரித்த முகத்துடன் வந்து வந்து போனான்.

உடம்பில் இருந்த ஜீவன் வெளியேறிவிட்டதைப் போலவும், இதயம் தக்கையாகிப் போனது போலவும் இருந்தது.

'நரேன்! என் கதியைப் பார்த்தீங்களா? அப்பாவைக் காணோம். தேடி வந்த இடத்துல உங்களைத் தொலைச்சிட்டு யாருமில்லாத அநாதையா– நிர்க்கதியா நிக்கிறேனே?

எனக்காக... உங்க வீட்டுல பொய் சொல்லிட்டு என்கூட வந்தீங்களே? என்னைப் பத்திரமா இங்க விட்டுட்டு, ஆபத்தைத் தேடி நீங்க போனீங்களே? எப்பேர்ப்பட்ட தியாக உள்ளம்?

அனலில் இடப்பட்ட புழுவா துடிக்கிறேனே... எப்படியாவது திரும்ப வந்துடுங்களேன்.

உங்களைப் பத்தி ஏதாச்சும் கெட்ட தகவல் வந்துடுமோன்னு பயமா இருக்கு. அதைக் கேட்ட மறுகணம் உயிரோட இருக்க மாட்டேன். இதே காட்டுலயே என் உயிரை விட்டுருவேன்.

அப்பாவையும், உங்களையும் தொலைச்சிட்டு நான் எதுக்கு வாழணும்? கடவுளே... எந்தப் பெண்ணுக்குமே இந்த நிலைமை வரக்கூடாது.'

முழங்கால்களைக் கட்டிக்கொண்டு, அதில் முகம் புதைத்து மவுனமாய் கண்ணீர் உதிர்த்தாள்.

அவ்வப்போது பக்கவாட்டில் திரும்பி ஓலைத்தடுப்பின் இடுக்கு வழியாக நோட்டமிட்டாள்.

இவள் சாப்பிடுவதற்காக காட்டுக் கனிகள் நிரம்பிய மூங்கில் கூடையை மண் கூஜா அருகே வைத்துவிட்டு, ஆசிரமத்தின் வாசலிலேயே இருந்தான் சாமிநாதன்.

'காதலனைத் தேடிக்கொண்டு காட்டுக்குள் நேத்ரா சென்றுவிட்டாள்... சிவகுரு ஐயாவுக்கு என்ன பதில் சொல்வது?'

என்ற பயத்தில் அவன் அந்தப் பக்கமோ, இந்தப் பக்கமோ நகராமல் வாசலில் நந்தி போல் அமர்ந்திருக்கிறான்.

அதை நேத்ராவால் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது.

எவ்வளவு நேரம்தான் அழுதாளோ? அவளுக்கே தெரியவில்லை.

அழுதழுது மனமும், உடலும் சோர்ந்து போய் அப்படியே சரிந்து முடங்கிப் படுத்தவள்தான்– அசந்து தூங்கி இருந்தாள்.

சில மணி நேரம் கழித்து சட்டென்று எழுந்தாள்.

மெல்லிய வெளிச்சம் மட்டும் மிச்சம் இருந்ததைப் பார்த்ததும், கடிகாரத்தை உற்றுப் பார்த்தாள்.

'இரவு பதினொரு மணியா?'

'இவ்வளவு நேரமும் நான் எப்படி தூங்கினேன்?'

'மனதில் சின்ன விசனம் ஏற்பட்டாலும், தூக்கம் வராமல் இரவு முழுவதும் கொட்டக் கொட்ட விழித்துக்கொண்டு இருப்பேனே?'

'அப்பாவையும், நரேனையும் காணாமல் தவிக்கிறேன். இவ்வளவு பெரிய கவலை, பாறாங்கல்லாய் மனதை அழுத்திக்கொண்டு இருக்கும்போது– என்னால் எப்படி அசந்து தூங்க முடிந்தது? விழிகளில் இன்னமும் தூக்கக் கலக்கம் மிச்சம் இருக்கிறதே? கடும் தூக்கம் எப்படி சாத்தியம்?'

புறங்கையால் கண்களில் கசக்கிக்கொண்டு மெல்ல எழுந்து வெளிப்பட்டாள்.

தியானம் செய்யும் இடத்திற்கு அருகே வந்து நின்றாள்.

அங்கு ஒரு சாண் அளவில் லிங்கமும், அதன் அருகே சிறிய அம்மன் சிலையும் காணப்பட்டன.

காட்டுப் பூக்கள் தூவப்பட்டிருந்தன. நேர் எதிர்புறம், அகன்ற மண் சட்டியின் நெருப்புத் துண்டுகளில் இருந்து ஏதோ புகை எழும்பி மெல்லியதாய் சுகந்த மணத்தைப் பரப்பிக்கொண்டிருந்தது.

அந்த நறுமணம் வித்தியாசமாய் இருப்பதை உணர்ந்தாள் நேத்ரா.

'ஓ... இப்போதுதான் எனக்கு காரணம் புரிகிறது. ஏதோ சதா



அழுதுகொண்டிருக்கும் என்னை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் இணைந்த சாமிநாதன்தான், இந்தப் புகையைப் போட்டிருக்கிறார்.

ஓலைத் தடுப்புக்கு அப்பால் புகையின் வாசம் பரவியபோது, நான் ஏதோ பூஜைக்கு சாம்பிராணி புகை போடுகிறார் என்றல்லவா நினைத்தேன்?

இது ஏதோ மூலிகை வாசம்தான். அப்படியே என்னைக் கிறங்க வைத்து நிம்மதியாக தூங்க வைத்துவிட்டதே?

வழக்கமாக சாமிநாதன் படுத்திருக்கும் இடத்தில் அவரைக் காணோமே?

ஆசிரமத்தின் கதவு சாத்தப்பட்டிருக்கிறது. திறந்து பார்க்கலாம்.'

வெறுமனே சாத்தி இருந்த கதவை மிக மெதுவாகத் திறந்தாள்.

வாசல் திண்ணையில் வெள்ளை விரிப்பால் தலை முதல் கால் வரை இழுத்துப் போர்த்திக்கொண்டு, குளிருக்கு முடங்கிப் படுத்திருந்தான் சாமிநாதன்.

வெளியில் வந்து கதவை இழுத்து மெல்லச் சாத்திவிட்டு, வலக்கை ஆட்காட்டி விரலால் கதவில் இரண்டு முறை தட்டினாள்.

மெதுவாக தொண்டையை செருமினாள்.

ஊகூம்... அவன் அசைந்து கொடுக்கவே இல்லை.

'என்னை மன்னிச்சிடுங்க சாமிநாதன். உங்க வார்த்தையை மீறி நான் போறேன். என்ன ஆச்சோ... ஏதாச்சோ? அப்படிங்கிற பயத்தில நிமிஷத்துக்கு நிமிஷம் செத்துக்கிட்டு இருக்கிறதைவிட, வனாந்தரத்துக்குள்ளே ஆபத்தைத் தேடிப் போறது எவ்வளவோ மேல் அப்படிங்கிற முடிவுக்கு நான் வந்துட்டேன்.'

மனதுக்குள் முணுமுணுத்தபடியே ஓசைப்படாமல் மெல்ல நடந்தாள்.

பத்தடி தூரம் வரை திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே நடந்த நேத்ரா, தயங்கி நின்றாள்.

சுற்றும் முற்றும் பார்த்தாள். பவுர்ணமி நிலவு, பால் ஒளியைப் பொழிந்துகொண்டிருந்தது.

தூரத்தில் மேகங்கள் ஒன்றுக்கொன்று மோதி குமுறின.

திக்குத் தெரியாத காட்டில்... எந்தத் திசையில் பயணிப்பது என்றே தெரியவில்லையே?

விழிகள் விரிய, கிளைப் பாதைகளை உற்று உற்றுப் பார்த்தாள்.

'இதோ... இந்தப் பாதை வழியாகத்தானே அன்று பஞ்சலிங்க தரிசனத்தை முடித்துவிட்டு வந்தோம்?

நரேன் அநேகமாக இந்தப் பாதை வழியாகத்தான் சென்றிருப்பார்...'

மனதில் யூகித்தபடி அந்த மலைப்பாதை மீது தட்டுத்தடுமாறி ஏறிச் செல்ல ஆரம்பித்தாள்.

முட்புதர்கள் அவ்வப்போது அவளது சேலையைக் கிழித்துப் பதம் பார்த்தன.

கற்களும், வழுக்குப் பாறைகளும் அவளை ஆங்காங்கே இடற வைத்து சறுக்கிவிடப் பார்த்தன.

ஓரிடத்தில் தடுமாறி ஒரு கருங்கல்லில் விழுந்ததில்... அதன் கூரான பகுதி, முழங்காலை சிராய்த்துவிட்டது.

'விண் விண்' என்று வலி தெறிக்க– சேலையை சற்று உயர்த்தி– அடிபட்ட இடத்தில் தொட்டுப் பார்த்தாள். ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

எழுந்துகொள்ளவும் திராணி இல்லாமல், விழுந்த இடத்திலேயே செய்வதறியாது அமர்ந்துவிட்டாள்.

## 16

பலத்த காற்று வீசியதால்... காட்டு மரங்கள் பேயாட்டம் போட்டன. காற்றில் மண் வாசனையும், மூலிகை மணமும் கலந்து வந்து நாசியைத் துளைத்தன.

'ஐயோ... மழை வேறு வரும் போலிருக்கே? எப்படி இந்தப் பாதையில் ஏறிச் செல்லப் போகிறேன்? ஒருசில இடங்களில்



இடுப்பளவுக்கு, காலைத் தூக்கி வைத்து ஏற வேண்டுமே? நரேனுடன் வந்ததால்... அன்று அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டு ஏறிச் சென்றுவிட்டேன்.

ஆனால் இன்று...?

நரேன் எங்கே போயிட்டீங்க?

'பார்த்து பத்திரம் நேத்ரா'ன்னு கரிசனமா– நொடிக்கொரு தரம் சொன்னீங்களே? நள்ளிரவில் நடுக்காட்டுல எப்படி விழுந்து கிடக்கிறேன் பார்த்தீங்களா?

அப்பா!

'வயசுப் பொண்ணை வீட்டுல தனியா விட்டுட்டுப் போக மனசில்லைம்மா. பக்கத்து வீட்டுப் பாட்டியை துணைக்கு வந்து படுத்துக்கச் சொல்லும்மா... பத்திரமா இருந்துக்கோம்மா' – அப்படின்னு மாய்ஞ்சு மாய்ஞ்சு சொல்வீங்களேப்பா?

உங்களையும் இழந்து, எனக்கு வாழ்க்கை தரப் போறவரையும் இழந்து... நடுஜாமத்துல அநாதரவா எப்படித் தவிக்கிறேன் பாருங்கப்பா.

நான் யாருக்கு– என்ன தீங்கு செய்தேன்?

எனக்கு எதற்காக இந்தக் கதி ஏற்பட்டது?

இன்றைக்கு ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும். வாழ்வா... சாவா? என்று பார்த்துவிட வேண்டியதுதான்!

பஞ்சலிங்க தரிசனம் செய்யும்போது, சாமியின் தலையில் இருந்து பூ விழுந்ததே?

அவ்வளவு பெரிய மணியில் இருந்து அனிச்சையாக மணியோசை ஓங்கி ஒலித்ததே?

இதெல்லாம்... நல்ல, அரிய சகுனங்கள் ஆயிற்றே?

சிவகுரு ஐயாவின் தயவும், அன்பும் கிடைத்ததே?

இத்தனைக்கு பிறகும் எனக்கு ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது?

சரி... சுய பச்சாதாபப்பட்டு பயனில்லை.

கீழுதட்டை அழுத்தக் கடித்து, பொங்கி வந்த அழுகையை அடக்கியபடி எழுந்து மெல்லத் தடுமாறியபடி நடக்கலானாள்.

பலத்த காற்றுடன் தூறல் வலுத்து மழை பெய்யத் தொடங்கியது.

காதை செவிடாக்கும்படி இடிச் சத்தம்...

ஆகாயத்தைக் கிறிய கிறுசில் மின்னலொன்று பளிரென்று முகம் காட்டிவிட்டு மறைந்தது.

'அப்பப்பா! என்ன வெளிச்சம்?'

எங்கோ நரி ஈனமாய் ஊளையிடும் சப்தத்தைக் கேட்டதும், நேத்ராவுக்கு சப்தநாடியும் ஒடுங்கிப் போனது.

அரை இருளில் பாதை ஓர முரட்டு வேர்களும்கூட பார்வைக்கு மலைப் பாம்புகளாய் நெளிந்து பீதியைக் கிளப்பின.

மலைப் பாதையில் சாதாரணமாகவே கற்களும், பாறைகளும் ஆளைக் கவிழ்க்க கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும்.

மழை வேறு வலுத்துவிட்டதால், அந்தக் காட்டுப் பாதையில் செம்மண், மழை நீரில் குழைந்து 'சொதக்', 'சொதக்' என்று ஒரு எட்டு எடுத்து வைப்பதற்குள் போதும் போதும் என்றிருந்தது.

மீண்டும் நரி ஊளையிடும் சப்தம் கேட்டதும், மழையில் நனைந்த புறாக்குஞ்சு போல் நடுநடுங்கிப் போனாள்.

'காட்டு மிருகங்கள் நடமாடும் வனப்பகுதி ஆயிற்றே? நரிக்கோ, வேறு கொடிய மிருகங்களுக்கோ நரேன் இரையாகிப் போயிருப்பாரோ?

என்னையும், அறியாமல் நான் எதற்கு நடுங்குகிறேன்? அப்படி எதுவும் நடந்திருந்தால்... அதே கொடிய மிருகங்கள் என்னையும் தங்களுக்கு இரையாக்கிக் கொள்ளட்டும்.'

வைராக்கியத்தோடு தொடர்ந்து நடந்தாள்.

'பவுர்ணமி அன்று பஞ்சலிங்க தரிசனத்துக்கு கங்கையம்மா வருவாரா?

அந்த அம்மாவைப் பார்ப்பதற்காக துறவிகளும், மற்றவர்களும் வருவார்கள் என்று கேள்விப்பட்டோமே?

அப்படியென்றால்... மருந்து மலையின் உச்சிக்குச் சென்றால் மற்றவர்களைப் பார்க்கலாமா?

அந்தப் பக்தர்கள் எந்த வழியாக சென்றிருப்பார்கள்?'



'டக்'கென்று நரேந்திரன் நேற்று மதியம் கூறியது ஞாபகத்திற்கு வந்தது.

'சாமிநாதன் ஒரு விஷயம் சொன்னாரு நேத்ரா! மேக மூட்டமா இருக்கு. மழை வரும் போலிருக்கு. மழை வர்ற நேரத்துல, ஜனங்க மருந்து மலைப் பக்கமே வரமாட்டாங்க. இந்தத் தடவை பவுர்ணமி தரிசனத்துக்கு பக்தர்கள் வர்றது சந்தேகம்தான்.

அது ஒரு திறந்தவெளிக் கோவில். அதோடு, மலை மேல ஏறி இறங்கறது ரொம்பவும் சிரமம். மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிங்கறதால மழை நேரத்துல ஆபத்தான பயணத்தை மேற்கொள்ள பக்தர்கள் ரொம்பவே பயப்படுவாங்கன்னு சொன்னாரு!

வாசுதேவனின் ஆட்கள் வேற நடமாடறாங்க. டி.வி. நிகழ்ச்சியில பரபரப்பா வேற செய்தி வந்துட்டதால, கங்கையம்மா இனிமே பகிரங்கமா பவுர்ணமி அன்னிக்கு வரமாட்டாங்கன்னு எனக்குத் தோணுது.

அதற்காகத்தான் அவங்க இருக்கிற இடத்தை நாமளே தேடிப் போய்...'

அப்போது நேத்ரா அவசரமாய் குறுக்கிட்டாள்.

'என்ன நரேன்? சின்னக் குழந்தை மாதிரி சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்றீங்க. ராத்திரியிலதான் ஆபத்துல இருந்து மீண்டு வந்திருக்கோம். கொஞ்சம் நிதானமா பொறுமையா இருங்க. சிவகுரு ஐயா வந்ததும், அவரையே கேட்போம். அவரு என்ன சொல்கிறாரோ... அதன்படி நடந்துப்போம். அதுதான் நமக்கு நல்லது. சரியா...?'

ஒப்புக்கு தலை ஆட்டியவன்தான்! அதற்கு மேல் இவனிடம் சரியாக எதுவும் பேசாமல் தீவிர யோசனையிலேயே மூழ்கிப் போயிருந்ததை எண்ணிப் பார்த்தபடியே- பெரிய பாறைகளில் சிரமப்பட்டு கவனமாய் ஏறி நடந்தாள்.

சடசடவென்ற பெரும் சப்தத்துடன் மரக்கிளைகள் ஏதோவொரு மரத்தில் இருந்து விழுந்ததைக் கேட்டு திக்கென்று அதிர்ந்து நின்றாள்.

சிறிது நிதானித்துவிட்டு- மீண்டும் பத்து நிமிடங்கள் சற்றே ஏறிச்சென்று- மலைப்பாதையில் தட்டுத் தடுமாறி நடந்த பின்

சமதளப் பரப்பு வந்தது.

'இன்னும் கொஞ்ச தூரம் நடந்து சென்ற பின்பு, மீண்டும் ஏற்றமான மலைப் பாதையில் பயணித்தால் மருந்துமலை பஞ்சலிங்க நிறந்தவெளிக் கோவிலை அடைந்துவிடலாம்.'

மனதில் சிறு நிம்மதி ஜனித்தது நிஜம்.

சமதளப் பரப்பு என்றாலும், அடர்த்தியான மரங்களுடன் பாதை குண்டும் குழியுமாகத்தான் இருந்தது.

மழையின் வேகம் சற்றே தணிந்தது.

மரங்கள் இருந்ததால், நிலா வெளிச்சம் அவ்வளவாக பூமியில் விழவில்லை. விழிகள் தெறிக்க உற்றுக் கவனித்து நடக்க வேண்டியதாய் இருந்தது.

இடுப்பளவுக்கு வளர்ந்திருந்த முட்செடி, அவளது முழங்கையைக் கீறிவிட....

"உஸ்... அம்மா!"

தகதகவென்று தீயாய் எரிந்த கையை, மெல்லத் தடவி விட்டுக்கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தாள்.

'பள்ளம் எது? அதல பாதாளம் எதுவென்றே தெரியவில்லையே?

சற்று நேரத்தில் இந்தப் பாதை வலப்புறமாக வளைந்து திரும்பும் அல்லவா?'

யோசித்தபடியே நடந்தபோது, பாதை ஒரு வளைவில் திரும்புவது போலிருந்தது.

தடுமாறி நிதானமாக நடந்தபோது, காட்டு நாய் மெல்லக் குரைக்கும் சப்தம் கேட்டது.

திடீரென்று அந்தச் சப்தம் நின்று போய், அதுவே ஓலமிட்டு அழும் ஓசையாகக் கேட்டது.

'நாய் ஊளையிட்டு அழுகிறதே? இது அபசகுனம் அல்லவா? எங்கிருந்து சப்தம் வருகிறது?' நாலாபுறமும் திரும்பிப் திரும்பிப் பார்த்துவிட்டு, அந்த வளைவில் தடுமாறி நடந்தபடி நேர் எதிரே பார்த்தவளுக்கு தூக்கி வாரிப்போட.... பயங்கரமாக அலறினாள்.

அவளது அலறலில் அந்தக் கானகமே கிடுகிடுத்தது.



# 17

நேத்ராவின் உடம்பில் உதறல் எடுத்தது. குளிராலும், பயத்தாலும் விழிகளை இறுக மூடிக்கொண்டாள்.

அவளையும் அறியாமல் துழாவி, அருகில் கைக்கு அகப்பட்ட மரத்தை சட்டென்று கட்டிப் பிடித்துக்கொண்டாள்.

'ஐயையோ! அது என்ன? வெள்ளை வெளேரென்று ஏதோவொரு உருவம் நிற்கிறதே?

ஆயிரம் 'டியூப் லைட்'களை எரியவிட்டது போன்று என்ன ஒரு வெளிச்சம்?

ஒருவேளை இது மோகினிப் பிசாசாக இருக்குமோ? இல்லை... இதுதான் வன மோகினியா?'

'திக் திக்' என்று இதயத்துடிப்பு பன்மடங்காக எகிறியது.

மரத்தைக் கட்டிப் பிடித்தபடி விழிகளை இறுக மூடியிருந்த நேத்ரா, 'நமச்சிவாய... நமச்சிவாய' என்று– பஞ்சாட்சர மந்திரத்தை விடாமல் உச்சரித்தாள்.

ஒரு சில கணங்களில் தன்னை ஆசுவாசப்படுத்தியவள்– வலுக்கட்டாயமாக தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, விழிகளைத் திறந்து உற்றுப் பார்த்தாள்.

காற்றில் இலைகளும், கிளைகளும் அசைகின்றனவே?

இது... இது... வன மோகினியும் இல்லை... மோகினிப் பிசாசும் இல்லை...

ஏதோ ஒரு மரத்தைப் போல் அல்லவா இருக்கிறது? கிளைகளும், இலைகளும் பரந்து– விரிந்து ஜெகஜோதியாக காட்சி அளிக்கிறதே?

ஆம்... இது மரமேதான். பளீரென்ற வெளிச்சத்தை அள்ளித் தரும் மரம்!'

இதயத்தில் படபடப்பு அடங்கி, மூளை மெல்ல சிந்திக்கத் தொடங்கியது.

'காட்டில் இதுபோன்ற மரங்கள் உண்டு. தனியாக துணிச்சலாக

காடுகளுக்குச் செல்லும் இளைஞர்கள், இவ்வகை மரங்களை திடீரென்று பார்க்கும்போது அதிர்ச்சியில் உறைந்து, சில நேரங்களில் பயத்தில் ரத்தம் கக்கி இறந்துவிடுவார்கள்.

தனியாக காட்டுக்குப் போனவனை, மோகினிப் பிசாசு அடித்துவிட்டது என்று வெளியில் பேசிக்கொள்வார்கள்.

வெளிச்சத்தை அள்ளி வழங்கும் இம்மரத்திற்கு 'ஜோதி மரம்' என்று பெயர். பழங்காலத்தில் இதுபோன்ற மரங்கள் இருந்ததற்கான சான்றுகள் இலக்கியங்களிலும், காவியங்களிலும் உள்ளன. மகாகவி காளிதாசன் இயற்றிய ரகு வம்சத்தில்கூட இதைப் பற்றிய குறிப்பு இருக்கிறது.'- அப்பா தசரதன் முன்பொரு தடவை இவளிடம் கூறியது... இப்போது மெல்ல நினைவுக்கு வந்தது.

'இது ஒரு வகையில் அரிய மரம், காணக் கிடைக்காத மரம். வெட்டத்தட்ட பொக்கிஷம் மாதிரின்னு வச்சுக்கோயேன். இதுல என்ன விசேஷம்னா... பகல்ல இந்த மரத்தைப் பார்த்தா சாதாரண மரத்தைப் போல்தான் இருக்கும். ஒரு வித்தியாசமும் தெரியாது.

இரவுலே மட்டும்தான் ஜெகஜோதியா வெளிச்சம் தரும். நல்லா விஷயம் தெரிஞ்சவங்க, இந்த ஜோதி மரத்தின் கிளையை ஒடிச்சு இருட்டுல- இரவு நேரத்துல வெளிச்சத்துக்காக பயன்படுத்துவாங்க.

சாதுக்கள், துறவிகள், சித்தர்களுக்குத்தான் இந்த மரத்தை இனம் கண்டுபிடிக்க பயன்படுத்தத் தெரியும். ஒருசில காட்டுவாசிகளுக்கும் இதைப் பத்தி தெரிஞ்சிருக்கு.'

அப்பாவின் வார்த்தைகள்... அவளது செவிகளில் ரீங்காரமிட்டன.

பயமும், திகிலும் மறுகணமே மாயமாகிப் போக- மனதில் நிம்மதியும், சின்ன திருப்தியும் தலைதூக்கின.

'ஆனா... இத்தனை கஷ்டத்திலும் மனதில் சின்னதாய் மகிழ்ச்சி தோன்றுகிறதே? அரிய ஜோதி மரத்தைப் பார்க்கும் பாக்கியம் ஏற்பட்டு இருக்கிறதே?'

அந்த மரத்தை நோக்கி நிதானமாக நடந்தாள்.

சற்று முன் பார்த்துவிட்டு பீதியில் அலறி உறைந்தவளுக்கு, இப்போது அதைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆசை



முகிழ்த்தது.

'இன்னமும் பத்தடி தூரம்தான்.

ஜோதி மரத்திற்குப் பக்கத்தில் சென்றுவிடலாம்' என்று மனம் கணக்குப் போடும் நேரத்தில், அவளது விழிகள் எதையோ கண்டு நிலைகுத்தி நின்றன.

மீண்டும் நரி ஊளையிடும் சப்தம் காதைக் கிழித்தது.

நாய்களும், நரிகளும் ஊளையிடுகின்றனவே! இது நல்லது அல்லவே?

மனதில் மறுபடியும் திகில் ஊறியது.

அதே நேரம், ஜோதிமரம் தந்த வெளிச்சத்தில் சுற்றிலும் ஓரளவுக்கு தெளிவாக பார்க்க முடிந்தது.

அம்மரத்திற்கு பின்னால், சுமார் ஏழெட்டு அடி தூரத்தில் ஓர் உருவம் மெல்ல நகர்ந்து சென்றுகொண்டிருந்தது.

'அது என்ன?'

உற்றுப் பார்த்தாள் நேத்ரா.

'வெள்ளை உருவம் நகர்கிறதே... எப்படி?'

'ஊகூம். யாரோ ஒருவர் வெள்ளைத் துணியால் தலையைப் போர்த்தி இருப்பதுபோல் தோன்றுகிறதே?

மெல்ல நடந்து செல்வதைப் பார்த்தால், மருந்து மலை பஞ்சலிங்க இறந்தவெளிக் கோவிலுக்குப் போவது போன்று தெரிகிறதே!

யாராய் இருக்கும்?

வாசுதேவன் அனுப்பிய ஆளாக இருக்குமோ?

நடை, உடையைப் பார்த்தால் அப்படி தெரியவில்லையே? சாதுவாய், சாந்தமாய், சாத்வீகமாய் நடந்து செல்கிறாரே?

இது சித்தர்கள் நடமாடும் வனப்பகுதி அல்லவா? இன்று பௌர்ணமி வேறு! கொட்டும் மழையைக்கூட பொருட்படுத்தாமல், மருந்து மலை உச்சிக்கு பஞ்சலிங்க தரிசனம் செய்யப் போகிறாரே?

இவரும் சித்தரோ?

கண்டிப்பாக அப்படித்தான் இருக்கும்!' என்று என் உள் மனம் சொல்கிறதே?

இவரைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டியதுதான்.

எது நடந்தாலும் சரி... 'துணிந்தவனுக்கு துக்கமில்லை' என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

பார்வையில் இருந்து அவர் மறைந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்.'

நடையை எட்டிப் போட்டாள்.

ஜோதி மரத்தைக் கடந்து, அந்த உருவத்தை நோக்கி பயணித்தாள்.

இந்த மலைப்பாதையில் பலமுறை நடந்து பழக்கப்பட்டவரைப் போன்று, நிதானமாக தட்டுத் தடுமாறாமல் முன்னே செல்பவரைத் தொடர்ந்து நடந்தபோது, நேத்ராவுக்கு அவ்வளவு சிரமம் தெரியவில்லை.

மலைப்பாதை செங்குத்து ஏற்றமாக சென்றது.

மூச்சிரைக்க அவரைப் பின்தொடர்ந்தபடியே ஏறிச் சென்றவளுக்கு, அவரது காலில் விழுந்து தன் நிலைமையை எடுத்துச் சொல்லி உதவி கேட்க வேண்டும் என்று தோன்றியது.

'சிவகுரு ஐயாவை மீண்டும் பார்க்க முடியவில்லை. இவரிடம் அழுது மன்றாடியாவது உதவி கேட்க வேண்டியதுதான். கங்கையம்மாவின் குகைக்குச் செல்லும் பாதையைக் காட்டிக் கொடுத்தால்கூட போதுமே...'– யோசித்தபடியே நடந்தாள்.

'இதோ... பஞ்சலிங்க திறந்தவெளிக் கோவிலும் வந்துவிட்டதே?

இனியும் தாமதிப்பது சரியல்ல. அந்தப் பெரியவரை அணுகி, உதவி கேட்டுவிட வேண்டியதுதான்.'

அவர் முன்னால் சென்று நின்றாள்.

"ஐயா... நான் நிர்க்கதியா நிக்கிறேன்! எனக்கு நீங்கதான் உதவணும்"– தழுதழுத்தபடி கெஞ்சினாள்.

அவர் முதுகு காட்டியே நின்றிருந்தார். பதில் இல்லை.

அன்று போல் இன்றும் காற்று பலமாய் வீசியது.

அப்போது...



# 18

**கா**ற்று வீசிய வேகத்தில், எங்கே கீழே விழுந்துவிடுவோமோ என்று பதறினாள். ஒரு வழியாக சுதாரித்துக்கொண்டு, பஞ்சலிங்கத்திற்கு நேர் எதிரே நின்றிருந்த நாகலிங்க மரத்தின் கிளையை இறுகப் பிடித்துக்கொண்டாள்.

கீழே உதிர்ந்திருந்த இலைச் சருகுகள், சலசலவென்ற சப்தத்துடன் உருண்டோடின.

பலத்த காற்று வீசியதால், முதுகு காட்டி நின்றிருந்தவரின் வெள்ளைத்துணி விலகி நழுவியது.

அதே கணம்– அவர் மெல்லத் திரும்பிப் பார்த்தார். காதைப் பிளக்கும் இடியோசையைத் தொடர்ந்து வானில் மின்னல் மின்னி மறைந்தது.

பளீரென்ற வெளிச்சத்தில்... அவரது முகத்தைப் பார்த்தவளுக்கு தூக்கி வாரிப்போட்டது.

"அ... அப்பா... நீ... நீங்களா?"

நேத்ராவுக்கு தனது விழிகளையே நம்ப முடியவில்லை.

'அப்பாவின் ஞாபகத்திலேயே நான் இருப்பதால், எதிரே இருப்பவரின் முகம், அவரைப் போல் தெரிகிறதா? அல்லது, உண்மையாகவே அப்பாதானா?


வாசுதேவனின் பிடியில் அகப்பட்டு இருந்தவர், இங்கு எப்படி வந்தார்?

சித்தர்கள் நினைத்த மாத்திரத்தில் பல்வேறு ரூபங்களை எடுத்து நடமாடுவார்கள் என்று கேள்விப்பட்டு இருக்கிறேனே?

ஒருவேளை... இந்த சித்தர், அப்பாவின் ரூபமெடுத்து உலாவுகிறாரோ?

நடப்பதெல்லாம் அதிசயமாக இருக்கிறதே? நான் காண்பது கனவா... நனவா?

கிள்ளிப் பார்த்தால் வலிக்கிறதே? இது நிஜம்தான்– சிவகுரு ஐயாதான், அப்பாவின் ரூபத்தில் நடமாடுகிறாரா?'





மனதுக்குள் அடுக்கடுக்கான கேள்விகள் முளைவிட்டன.

"என்ன நேத்ரா... அப்படிப் பார்க்கிறே? அப்பாவை அடையாளம் தெரியலையா?"

சாட்சாத் அப்பாவின் குரல்தான். அப்பாவேதான்!

"அப்பா..."

தழுதழுத்தபடியே ஓடிச்சென்று, அவரது கரங்களைப் பற்றி ...ண்களில் ஒற்றிக்கொண்டாள்.

"வாசுதேவனின் கும்பல்கிட்டே இருந்து எப்படிப்பா தப்பிச்ச ...ந்தீங்க? நீங்க காணாம போனதும்... உங்களைத் தேடிக்கிட்டு ...னும், நரேனும் இந்தக் காட்டுக்கே வந்துட்டோம்!

சிவகுரு ஐயாதான் எங்களுக்கு அடைக்கலம் தந்தாரு. பெரிய ...பத்தில் இருந்தும் எங்களைக் காப்பாத்தினாரு.

உங்களை மீட்கணும்னா, கங்கையம்மாவை நேரிலே சந்திக்கணும். அவங்களைச் சந்திச்சா, ஒரு தீர்வு கிடைக்கும்'னு நரேன் ரொம்பவே ...ம்பினாரு. என்கிட்ட கூட சொல்லிக்காம நடுராத்திரியிலே அந்தம்மாவைப் பார்க்கிறதுக்காக கிளம்பிப் போனவருதான்... திரும்பி வரவே இல்ல.

நமக்காக காட்டுக்கு வந்தவரு. அவருக்கு என்ன ஆச்சோ தெரியலை. அதான் நானும் அவரைத் தேடிக்கிட்டு இங்கே வந்துட்டேன்.

நீங்க காணாம போனதிலே இருந்து... இதோ இந்த நிமிடம் வரைக்கும் நான் துடிச்ச துடிப்பு இருக்கே... இந்த பகவானுக்குத்தான் தெரியும்."

பஞ்சலிங்கத்தை சுட்டிக் காட்டிவிட்டு இரு கரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு 'கோ'வென்று கதறினாள்.

அவளது புஜத்தில் மிருதுவாய் ஒரு கரம் படிந்ததும், சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

காவி நிற சேலையுடன் கழுத்தில் ருத்திராட்ச மாலையையும், படிக மாலையையும் அணிந்தபடி நெற்றியில் விபூதியும், பெரிய குங்குமமுமாக ஜடா முடியுடன் ஒரு அம்மாள் நின்றிருந்தார்.

வயது அறுபதுக்குள் இருக்கலாம்.

முகத்தில் அலாதியாய் ஒரு தேஜஸ்! உதட்டில் தெய்வீக புன்னகை ஒட்டிக்கொண்டிருந்தது.

"மனசை என்னிக்குமே தளர விடக்கூடாது நேத்ரா. கடை வரைக்கும் நம்பிக்கையை கைவிடவே கூடாது. இவ்னோ நேரமு வைராக்கியமா எது நடந்தாலும் போராடிப் பார்த்துடலாங்கு உத்வேகத்தோட துணிஞ்சு தைரியமா மலை உச்சி வரைக்கு வந்தியே?

உன்னை நான் பாராட்டுறேன். எப்பவும் அதே மனோதிடத்தோடதான் இருக்கணும். புரிஞ்சுதா?"

நீர்த் திரையிட்ட விழிகளோடு அந்த அம்மாவை ஏற இறங்க பார்த்த நேத்ரா, திகைத்துப் போய் தசரதனை ஒரு கணம் ஏறிட்டுவிட்டு மீண்டும் அந்தம்மா மீதே பார்வையைப் பதித்தாள்.

"நீங்க...?"– தயங்கி நிறுத்தினாள்.

"கங்கையம்மாவேதான்..." புன்னகைத்தாள்.

அவனது முகத்தில் குபீரென்று ஆச்சரியமும், திகைப்பும் பரவ... சட்டென்று கைகளைக் கூப்பி, அவரின் பாதங்களில் பணிந்தான்.

"கூடாது... பகவானின் சந்நிதானத்துக்கு முன்னால் வேறு யார் காலிலும் விழக்கூடாது. எழுந்திரு! என்னடா இது? மூணு தலைமுறையைக் கடந்தும், இன்னமும் கூன் போடாம முதுமையில தளர்ச்சி அடையாம இருக்கேனேன்னு பார்க்கிறியா?"

"ஆ... ஆமா."

"எல்லாமே சஞ்சீவி மூலிகையோட மகிமையாலதான்."

"அ... அந்த மூலிகையைப் பத்தி தெரிஞ்சிக்கணும். அதை வச்சு பணமாக்கணும்கிற வெறியிலதான் அந்த வாசுதேவன், அப்பாவைக் கடத்தினான். கடவுள் புண்ணியத்துல அவர் எப்படியோ தப்பிச்சிட்டாரு. இது விஷயமா உங்களைத் தேடி வந்த நரேனைக் காணோமே? ஒருவேளை அவரு அந்த கும்பல்கிட்டே மாட்டிக்கிட்டாரோ?"– கவலையுடன் கேள்வி கேட்டவளை உற்றுப் பார்த்துவிட்டு, கலகலவென்று சிரித்தார் கங்கையம்மா.

"வாசுதேவன்கிட்டே உங்க அப்பா மாட்டிக்கிட்டாருன்னு உனக்கு யார் சொன்னாங்க?"



அவனது முதுகுக்குப் பின்னால் இருந்து குரல் வந்ததும், டென்று திரும்பிப் பார்த்தான்.

சிவகுரு நின்றுகொண்டிருந்தார். இவன் பதறினான்.

"ஐயா... நீங்க திரும்பி வர்ற வரைக்கும் என்னால பொறுமையா ரமத்துல காத்திருக்க முடியலை. மனக்கவலை என்னை ஆட்டிப் டைச்சதாலே உங்ககிட்ட அனுமதி கேட்காம இங்கே கிளம்பி துட்டேன். நரேனும் அதே தப்பைத்தான் செய்தாரு.

உங்களுக்கு சகலமும் தெரிஞ்சிருக்குமே? முதல்லே நான் உங்ககிட்ட ன்னிப்பு கேட்டுக்கிறேன்" என்று கரங்களைக் கூப்பினான்.

"என் கேள்விக்கு இன்னமும் நீ பதில் சொல்லலை" என்ற ந்தகாசமாய் புன்னகைத்தவரை– குழப்பத்துடன் ஏறிட்டான்.

"வாசுதேவன்தான் கடத்தி இருக்கணும்னு நானாகத்தான் ஹிச்சேன். ஏன்னா... முதல் நாள் வீட்டுக்கு வந்த மனுஷன், அப்பா துக்கும் வளைஞ்சு கொடுக்காம இருந்ததும் கோபாவேசமா– மாற்றமா எழுந்து போனாரு.

அகங்காரமா, மூர்க்கத்தனமா அப்பாவை எச்சரித்துவிட்டுப் பானதை நான் பார்த்தேன். மறுநாளே அப்பா, வீட்டுக்கு ரலை...

வாசுதேவன் தன் சகாக்களோடு காட்டுக்கே கடத்திட்டுப் போய் இருக்கணும்னு நரேன் ஊகிச்சாரு?"

"உங்க ஊகம் சரிதான். ஆனா, வாசுதேவன் கடத்தவே இல்லை."

"ஊகம் சரிதான்னு சொல்றீங்க. வாசுதேவன் கடத்தவே இல்லைன்னும் சொல்றீங்க. குழப்பமா இருக்கேப்பா!"

நேத்ரா தசரதனையும், சிவகுருவையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"வாசுதேவன் கடத்த முற்படுவான். அது மட்டுமல்ல... பேராசையாலே அவன் எந்த எல்லைக்கும் போவான்னு தெரிஞ் சுதான் தசரதன் சட்டுன்னு மருந்து மலைக்கு அவராவே கிளம்பி வந்துட்டாரு..."

"அ... அப்படியா? இப்படித்தான் நடக்கும்னு ரொம்பத்

துல்லியமா கணிச்சு, என்கிட்டகூட சொல்லிக்காம காட்டுக்கு கிளம்பி வந்திருக்காரே? ரொம்ப ஆச்சரியமா இருக்கு. நரேன் என்ன ஆனாரு? தயவுசெய்து சொல்லுங்க ஐயா."

பதில் ஒன்றும் வரவில்லை.

மூவரும் மவுனமாய் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு இருந்ததும், நேத்ராவுக்கு உள்ளூர திகில் படர்ந்தது.

## 19

காட்டுக்குள் தன்னந் தனியாய் மலைப்பாதை மீது ஏறி வந்ததைவிட, இப்போதுதான் அதிகப்படியாய் இதயத் துடிப்பு எகிறியதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது.

"அப்பா! என்னப்பா இது? இப்படி மூணு பேரும் மவுனமா இருக்கிறதைப் பார்த்தா எனக்கு ரொம்ப கலக்கமா இருக்கே? நரேனுக்கு என்ன ஆச்சுப்பா? நம்மாலதானேப்பா அவருக்கு இந்தக் கதி? அவருக்கு ஏதாச்சும் ஒண்ணுன்னா... நா... நா உயிரோடவே இருக்க மாட்டேன்."

உடைந்துபோய் அழுதாள்.

"நேத்ரா! இதோ... நான் இங்கேதான் இருக்கிறேன்" ஒரு சரிவில் இருந்து மரக்கிளைகளை ஒதுக்கியபடி வந்துகொண்டிருந்தான் நரேந்திரன்.

அவனைக் கண்டதும் நேத்ராவுக்கு உலகமே மறந்து போனது. ஓடிச்சென்று அவன் எதிரே நின்றவள், "உங்களுக்கு ஒண்ணும் ஆகலையே... நரேன்! 'ஐ லவ் யூ ஸோ மச்...' உங்க அளவுக்கு நான் அன்பை வெளிப்படுத்தறதே இல்லைன்னு என் மேல குறைபட்டுப்பீங்களே? இப்ப சொல்றேன்... கேட்டுக்கோங்க. நீங்க இல்லாம என்னால ஒரு நிமிடம்கூட வாழ முடியாது. நீங்க மட்டும் வராம இருந்திருந்தா... நான் கண்டிப்பா என் உயிரை விட்டிருப்பேன்" என்றபடி விசும்பினாள்.

உரிமையாய் அவனை இழுத்து, தன் மார்போடு

...த்துக்கொண்டான் நரேந்திரன்.

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா? நான்தான் பத்திரமா ...ந்துட்டேனே... கண்ணைத் துடைச்சுக்கோ. நடந்த விஷயங்களைப் ...த்தி சொன்னா– நீ ரொம்ப ஆச்சரியப்பட்டு போவே."

"என்ன நடந்துச்சு நரேன்?"

புறங்கையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அவனது ...டியில் இருந்து மெல்ல விலகி சங்கோஜமாய் சுற்றிலும் ...ருந்தவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ஆர்வமாய் நரேனை ...றிட்டாள்.

"நேத்து ராத்திரி மலைப்பாதை மேல ஏறி வந்துட்டிருந்தேன். ...சடி– கொடிகளையும், மரக் கிளைகளையும் ஒதுக்கிக்கிட்டு யாரோ ...ன்னைப் பின்தொடர்ந்து வர்ற மாதிரி சலசலப்பு சப்தம் கேட்டுட்டே ...ருந்தது. ஏதாவது கொடிய மிருகமா? இல்ல, வாசுதேவனோட ...ட்களான்னு தயங்கிட்டே நான் போய்கிட்டு இருந்தப்போ யாரோ ...ருத்தன் மரக்கட்டையால ஓங்கி என் தலையில அடிச்சிட்டான். ...லையைப் பிடிச்சுக்கிட்டு திரும்பிப் பார்த்தப்போ, வாசுதேவன், ...ன் ஆட்களோடு நின்னுட்டிருந்தான். நான் அப்படியே மயங்கி ...ரிஞ்சிட்டேன்."

"ஐயோ... தலையில பலமா அடிச்சிட்டானா?"– பதறினாள்.

"பதற்றப்படாதே நேத்ரா! நான் கண் விழிச்சப்போ... மூலிகைகளை ...ன்ன மஞ்சத் துணியில கட்டி, அதை வச்சு காயத்துக்கு இந்த ...ங்கையம்மாதான் ஒத்தடம் கொடுத்துட்டு இருந்தாங்க. பக்கத்துல ...டா முடியோட அவங்க கணவர். எதிர்த்தாப்பல சிவகுரு ஐயாவும், ...மாமாவும் நின்னாங்க.

மாமாவைப் பார்த்ததும் எனக்கு ஆச்சரியம் தாங்க முடியல. ...ஏதோ மூலிகைச் சாறை, சிவகுரு ஐயா எனக்கு குடிக்கக் ...கொடுத்தாரு. உனக்கு ஒண்ணு தெரியுமா? மாமாவும், சிவகுரு ஐயாவும் ஒண்ணுதான்! என்ன முழிக்கிறே? ஆமாம்... நேத்ரா!

சிவகுரு ஐயாவைப் போலவே சித்து விளையாட்டுகள் எல்லாம் ...மாமாவுக்கும் அத்துப்படி. அவரைப் போலவே இவருக்கும் ஞான திருஷ்டி எல்லாம் உண்டு."

"அப்படியா?"

ஆச்சரியத்திலும், சந்தோஷத்திலும் விழிகளில் கண்ணீர் தளும்ப, தன் அப்பாவை பெருமிதமாய்ப் பார்த்தான்.

தூரத்தில் மீண்டும் காட்டு நாய்களும், நரிகளும் ஊளையிடும் சப்தம் கேட்டதும்... அனைவரும் அந்த திக்கை நோக்கி திரும்பிப் பார்த்தனர்.

"நேத்து ராத்திரி அந்தக் கும்பல் என்னைத் தாக்கிவிட்டு நீரோடையைக் கடக்க முற்பட்டபோது, காட்டு வெள்ளம் திடீர்னு பிரவாகம் எடுத்து வந்து அடிச்சிக்கிட்டு போயிடுச்சு. ஒருத்தர்கூட மிஞ்சல. அதுல யாரோ ஒருத்தரோட உடம்பு கரையோரத்திலோ, பாறை இடுக்கிலோ சிக்கி இருக்கும்னு நெனைக்கிறேன். அதான் நரிக்கூட்டமும், நாய்களும் இரை கிடைச்ச சந்தோஷத்துல ஊளையிடுது."

நரேந்திரன் பேசி முடித்ததும் கங்கையம்மா சிரித்தார்.

"கெடுவான் கேடு நினைப்பான்னு சொல்வாங்க. அது சரியா போச்சு பார்த்தியா நேத்ரா. அபூர்வமான விஷயமெல்லாம் அபூர்வமான மனுஷங்களுக்குத்தான் கிடைக்கும். எல்லோருக்கும் கிடைக்காது. கிடைச்சிட்டா அதை தப்பான வழிக்கு பயன்படுத்த ஆரம்பிச்சிடுவாங்க. சில ரகசியங்கள், ரகசியமாத்தான் இருக்கணும். அப்படி இல்லேன்னா- அதனால ஊர் உலகத்துக்குத்தான் கெடுதல்.

தசரதன் ரொம்ப நல்லவர். அவரு சிவகுருவோடு சேர்ந்து, அரிய வகை மூலிகைகள் உதவியுடன் மனித சமுதாயத்துக்கு சேவை செய்துட்டு இங்கேயே இருக்கணும்னு பிரியப்படுறாரு.

நேத்ரா! நீயும், நரேந்திரனும் மருத்துவர்கள். உங்களுக்கு ஒரு சில மூலிகைகளைப் பத்தின தகவல்களை, சிவகுரு சொல்வாரு. அதை வச்சு, தீராத நோயோடு தவிக்கிற நல்ல மனம் படைச்சவங்களுக்கு நீங்க உதவணும். மனுஷங்களை பார்க்கிற பார்வையிலேயே எடை போடுற திறமை உங்ககிட்ட இருக்கு" என்று கூறிவிட்டு நிறுத்தினார் கங்கையம்மா.

"அது மட்டுமல்ல... உயிரே போகக்கூடிய நிலைமை வந்தாலும் கடைசிவரைக்கும் வைராக்கியமா, விடாமுயற்சியோட போராடுற குணம் உங்களுக்கு இருக்கிறதால எந்த ரகசியத்தையும் கட்டிக்



ப்பீங்கங்கற நம்பிக்கை எங்களுக்கு இருக்கு. எல்லாமே உங்களுக்கு க்கப்பட்ட சோதனைகள்தான். எல்லாத்தையும் தாண்டி, புடம் ாட்ட தங்கமா ஜொலிக்கிறீங்க. நீங்க வாழ்வாங்கு வாழணும்"- களை உயர்த்தி ஆசீர்வதித்தார் சிவகுரு.

அருகில் இருந்த காட்டுப் பன்னீர் மரத்தின் அடியில் ர்ந்திருந்த பூக்களைக் கொஞ்சம் அள்ளிய தசரதன், இருவரின் மும் அட்சதையாய் தூவிவிட்டு- அவர்களின் கரங்களை ஒன்று ர்த்து வைத்தார்.

"மருந்து மலை ஈசனோட அன்புக்குப் பாத்திரமாயிட்டீங்க. துக்கு ரொம்ப புண்ணியம் பண்ணி இருக்கணும். நீங்க அமோகமா முணும். மருத்துவத்திலே நிறைய சாதிக்கணும்."-

தசரதன் பேசி முடித்த மறுகணமே, அந்தப் பெரிய மணி ஷிச்சையாய் ஓங்கி ஒலிக்க... 'சிவாய நம' என்று பஞ்சாட்சர திரத்தை உச்சரித்தபடி கங்கையம்மா, சிவகுரு, தசரதன் ஆகியோர் யனை வலம் வந்து தியானத்தில் அமர... தூரத்தில் இருந்தபடி ன்மீக அதிர்வில் விழிகளில் கண்ணீர் புரள, நரேந்திரனுடன் ந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தான் நேத்ரா.

பன்னீர் மரப் பூக்களின் நறுமணம், எங்கும் கமகமத்தது.

(முற்றும்)

## மூன்று

| | | |
|---|---|---|
| ருக்க வேண்டியவை | - | தூய்மை, நீதி, நேர்மை. |
| டக்கி ஆள வேண்டியவை | - | நாக்கு, நடத்தை, கோபம். |
| பற வேண்டியவை | - | தைரியம், அன்பு, நாணயம். |
| ளிக்க வேண்டியவை | - | கொடை, ஆறுதல், பாராட்டு. |
| விர்க்க வேண்டியவை | - | கொடுஞ்சொல்,முரட்டுத்தனம், நன்றி மறத்தல். |
| நசிக்க வேண்டியவை | - | அறிவு, கற்பு, மாசின்மை. |

- நெ.ராமன், சென்னை.